

# தமிழர் வீழ்ச்சி

நீல. துரைக்கண்ணன்

பகலவன் பாசறை

சென்னை—5

ால்
பாணத்

பாசறை
வெளியீடு 5

முதற் பதிப்பு
ஏப்ரல் 1952

0 3 NTK2, I
N52

விலை ரூபாய்
1-0-0

104926

Sri Sai Baba
Press

# பதிப்புரை



★

"கைலாயத்தில் புரட்சி" என்ற கருத்துக் கருவூலத்தை இன்பத் திராவிடத்துக் களித்த சிந்தனைச் செல்வர் நீல. துரைக்கண்ணன் அவர்களின் சிந்தனையிலிருந்து சிதறிய ஒரு சரித்திர விளக்கத்தை, வரலாறு தந்த பாடத்தை "தமிழர் வீழ்ச்சி"யாக உங்கள் முன் வைக்கிறோம். இன்னும் பல அரிய அறிவு பொக்கிஷங்களை குறிப்பாக "இலக்கியம் கண்ட திராவிடம்", "திராவிடர் வீரம்" என்றதோர் நீல. துரைக்கண்ணன் தீட்டிய இரு சரித்திர ஏடுகளையும் பாசறை விரைவில் உங்களுக்கு அளிக்கும் என மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலுக்கு சிறப்புரை அளித்த அறிஞர் கா. அப்பாத்துரை, M.A., L.T. அவர்கட்கும், இந்நூலை எமக்கு உரிமையாக்கிய தோழர் நீல. துரைக்கண்ணன் அவர்கட்கும் என் இதயம் என்றும் கடமைப் பட்டுள்ளது.

வணக்கம்.

**கோ. சம்பந்தன்**

# முன்னுரை

தமிழ்நாடு ஒரு காலத்தில் அறிஞர்களும், கலைஞர்களும் நிறைந்த நாடாக விளங்கியிருந்தது. இது வரலாறு கண்ட உண்மை: இத்தகைய உயரிய நாடு இன்று இழிநிலையில் இருப்பதற்குக் காரணம் யாது? எக்காலத்திலிருந்து இவ்விழிநிலை ஏற்பட்டது? என்ற உண்மைகளை யாரும் ஆராய்ந்து எழுதுவதில்லை. தமிழகத்தில் சரித்திரம் எழுத பலர் ஆரம்பித்து இருக்கின்றனர். நடுநிலைமை தவறு சிலர் உண்மையை எழுதிவிடுகின்றார்கள். சிலர் அறிந்திருந்தும் உண்மையை எழுத அஞ்சுகிறார்கள், சிலர் மதக் காய்ப்பினால் உண்மைக்கு மாறாகவே துணிந்து எழுதிவிடுகின்றார்கள். கல்கியைப் போன்ற சில பத்திரிக்கைகளில் வரலாறும் கற்பனையுங் கலந்து தமிழ் நாட்டுச் சரித்திரம் தலைகீழாக எழுதப் படுகின்றன. ஏன் என்று கேட்டால் கதாசிரியனுக்கு வரலாற்றையே புரட்டி எழுத உரிமை உண்டென வாதிக்கின்றனர். இவ்வாறு பலவிதமான ஆசிரியர்களின் மனப்போக்குப் படி சரித்திரம் எழுதப்படுவதால் தமிழ் நாட்டின் உண்மை வரலாறு மறைந்தே விடுகின்றது. ஆனால் நடுநிலைமையாளரின் வரலாறுகள் ஆழ்ந்த ஆராய்ச்சிகளுடன் வெளிவருவதால் இவைகள் யாவும் பிற்காலத்தில் செல்லாக்காசாகப் போய் விடும் என்பது நமது நம்பிக்கை,

திருஞானசம்பந்தர் கதையை எடுத்துக் கொள்ளுவோம். இதைப்பற்றிப் பலர் பலவாறாக எழுதியுள்ளார்கள். அவைகளுக்குள்ளும் ஒற்றுமையில்லை. முன்னுக்குப்பின் முரணாகவே காணப்படுகின்றன. இக் கதையைப்பற்றி சமணர்களின் நூல்களில் ஆதாரமே யில்லை. மேலும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களுக்கு உரை எழுதிய பேராசிரியர்களில் ஒருவர்கூட தங்களுடைய உரைகளில் மேற்கோளாக தேவாரங்களையோ, பெரிய புராணத்

தையோ எடுத்தாளவேயில்லை. எனவே திருஞானசம்பந்தர் கதை மதக் காய்ப்பினுல் எழுதப்பட்டதாக இருக்கலாமென்பது தெளிவு.

எது எவ்வாருயினும் இப்புராணக் கதைகளின் போக்கை ஆதாரமாகக் கொண்டு தமிழ்நாடு எவ்வாறு வீழ்ச்சி யடைந்திருக்கும் என்பதை ஒருவாறு ஊகித்துணரலாம். ஆரியர்களின் வேதங்களையும், வேள்விகளையும் ஏற்காத மக்கள் அவர்களை எதிர்த்து போராடினுர்களாகையால் சம்பந்தர் கூட்டத்தார் வஞ்சகமாக அவர்களை அழித்தே விட்டனர், வந்த விடத்திலே வளமாக வாழ விரும்பிய வர்க்கத்தாருக்கு பலியானுர்கள் பல்லாயிரக் கணக்கிலே தமிழர்கள். அந்தப் படுகொலையை மறைக்கத் தெள்ளிய தமிழிலே, தேன்சுவை கற்பனைகளினுல் மாந்தரை மயக்கி அவர்களுக்குப் பக்திப் போதையை மூட்டி, அவர்கள் மயங்கிக் கிடக்க ஆரியம் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்திருக்கிறது. அந்த மயக்கம் இன்றும் நாட்டினருக்கு பூரணமாக தெளியவில்லை என்றே கூறலாம், அக்குறையை போக்க எழுதப்பட்டதுதான் இத் ''தமிழர் வீழ்ச்சி'' என்ற நூல்.

இந்நூலை நான் எழுதி ஏறகுறைய ஒன்றை ஆண்டு காலமாகிவிட்டது. உடனே வெளி வராமைக்குக் காரணம் பல. ஆயினும் பல இன்னலுக் கிடையே ''தமிழர் வீழ்ச்சி'' என்ற இந்நூலை பதிப்பித்து எழுச்சி காணத் துடிக்கும் அனைவருக்கும் புத்தக வடிவிலே நாட்டிற்கு நல்கிய ''பகலவன் பாசறை'' நிர்வாகி தோழர் கோ. சம்பந்தம் அவர்களுககும், இந் நூலுக்கு மதிப்புரை மனமுவந்து வழங்கி என்னை பெருமைப் படுத்திய பன்மொழிப் புலவர், அறிஞர் கா. அபபாத்துரை, M.A., L.T. அவர்களுச்கும் என் மாரு அன்பையும், வணக்கத்தையும் செலுத்த என்றும் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்

**நீல. துரைக்கண்ணன்**

# அறிஞர் கூறுகிறார்

தமிழர் வீழ்ச்சி! இது ஒரு தனி நிகழ்ச்சியல்ல. மீண்டும் மீண்டும் குதித்துவிழும் பல அருவிகள் அடங்கிய ஒரு நீர்வீழ்ச்சி போன்று, பல காலங்களில் நிகழும் பல நிகழ்ச்சிகள் கடந்து நிலவும் ஒரு பொதுப் போக்கே அது—அதன் ஒரு சித்திரமே இந்நூல்.

தமிழர் எதனால் வீழ்ந்தனர், வீழ்கின்றனர்? தம் முள் தாம் உயர விரும்பி, பிறருதவியுடன் தம்மவரை வீழ்த்த நாடும் நாசகாலப் போட்டியினால்! தமிழகம் இப்பண்பைத் தென்னாடு முழுவதற்கும், தென்னாடு இந்தியாவுக்கும் பொல்லா வரமாக அளித்துள்ளது. இராமாயணத்தில் விபீடணன் தொடங்கிய மரபு வட நாட்டிலும் ஒரு ஜயசந்திரனைத் தந்தது. அவனே தன் மருமகன் பிருதிவியை அழிக்க முகமதுகோரியைக் கொண்டு வந்து, தானும் விழுந்தான். இதே பண்பு முஸ்லிம்களையும் விடவில்லை. இப்ராஹிம்லோடி தன் உறவினனை வீழ்த்த பாபரை வரவழைத்து, முஸ்லிம் விபீஷணனானான்!

தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் இரண்டு பேரரசுகள் இத்தகைய மைத்துனப் போராட்டங்களால் அழிந்தன. ஒரு பேரரசு காஞ்சியிலிருந்து ஆண்டது. அது பல்லவப் பேரரசு. மற்றொரு பேரரசு மதுரையிலிருந்து ஆண்டது. அது பாண்டியப் பேரரசு. பல்லவப் பேரரசுக்கு விபீஷணனாய் அமைந்தவர் அப்பர் என்ற திருநாவுக்கரசர். பாண்டியப் பேரரசின் விபீஷணனாய் விளங்கினவர் குலச்சிறையார். இருவரும் இன்று சைவரால் நாயன்மாராகப் போற்றப்படுபவர்கள்.

'சைவ நாயன்மார் விபீஷணரா?' என்று சைவர் பலர் குமுறி எழக்கூடும். தமிழர் சமயம் பற்றிய வழி

லாற்றறிவும் அதனால் பிறக்கும் அமைதியும் இச்சீற்றம் தணிவிக்கும்.

சைவம், வைணவம், சமணம், புத்தம் ஆகிய நான்கு சமயங்களும் வேறு வேறு சமயங்கள் என்று இன்று மக்கள் நம்பிவிட்டனர். ஆனால வரலாற்றில் பின்னோக்கிச் செல்லுந் தோறும் சைவமும் சமணமும் ஒன்று; புத்தமும் வைணவமும் ஒன்று என்று காண லாம். இன்னும் பின் சென்றால், இவ்விரு கிளைகளும் மோகெஞ்சதாரோவில் ஒரு சமயமாக நிலவுவது காணலாம்.

பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய நூல்கள் காலத்துச் சைவ வைணவம் வேறு. தேவார திருவாசக நாலாயிரப்பிரபந்த காலத்துச் சைவ வைணவம் வேறு. பின்னதைவிட முன்னது ஆரியச் சார்பு குறைந்தது. ஆனால் முன்னதே முதலில் பேரளவான ஆரியக் கலப்புக் கண்டது. திருமூலர் காலச் சைவம் திருக்குறளிலிருந்து பெரிதும் மாறுபட்டதல்ல, இதற்கும் முற்பட சைவமும் சமணமும் ஒரு சமயத்தின் இரு கிளைகளே ஆதல் காண்பது அரிதன்று.

வடநாட்டில் ஆரியக் கலப்பால் கேடுற்ற கபாலிக சைவம் பல்லவர் காலத்திலேயே தமிழகத்தில் புகுந்தது. ஆரியர் அதனுடன் உறவாடி அவர்கள் உதவியால் பண்டைத் தமிழர் சமய நெறியின் அறிவுக் கிளையான சமண சமயத்தை முதலில் அழிக்கத் திட்டமிட்ட கதையை இந்நூல் எடுத்துக் காட்சிக் கிலக்காக்குகிறது,

சமணரைக் கழுவேற்றிய கதைகளையும் இது போன்ற வேறு பல கதைகளையும் சமயப் பற்றுடையவர்கள் ஆராயாமல் அப்படியே ஏற்பதுடன் நில்லாமல், பாராட்டுவதுகூட உண்டு, ஆனால் இதே வகைக் கதை

களைப்பிற சமயங்களில் நாம் கண்டிக்கிறோம், ஸ்பெயினில் புரோட்டஸ்டாண்டுகளும், ஸ்காட்லந்தில் கத்தோலிக்கர்களும். இங்கிலாந்தில் இரு சாராரும் நூறுயிரக் கணக்கில் தலைவெட்டி இயந்திரத்தால் கொலையுண்டதைச் சைவ வைணவர் கட்டாயம் கண்டிப்பர். சமணரைக் கழுவேற்றியது இதுபோன்ற நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமல்ல. நம் காலத்தில் சமயவாதிகள் எண்ணுவதுபோல், சமய இயக்கங்கள் வெறும் அன்பியக்கமாகவோ, அறிவியக்கமாகவோ வரலாற்றில் இருந்ததில்லை. போர்களாலும் சூழ்ச்சிகளாலும் மன்னர் பேரரசு நிறுவுவதுபோலவே, சமயங்களும் உலகில் அரசியல் ஆதிக்கம், சூதுவாது சூழ்ச்சிகளாலே உலகில் பரவ முடிகிறது, இங்ஙனம் இஸ்லாம், இஸ்லாமியப் பேரரசுகளாலும், கிரிஸ்தவ சமயம், உரோமப் பேரரசுபோன்ற மேனாட்டு வல்லரசுகளாற்றலாலும் பரவியவையே. அசோக பேரரசராதரவால் வளர்ந்த புத்தம் வேறு பேரரசின் ஆதரவில்லாமலே தான் அழிந்தது. "ஆகவே சமய வாழ்வும் அரசியல் வாழ்வும்; சமய இயக்கங்களும் அரசியல் இயக்கங்களும் உலகில் பெயரளவில்தான் வேறுபட்டவை. நடப்பில் என்றும் அவை ஒரே ஆதிக்கத்தின் இரு பதிப்புகளே.

சைவம் தமிழகம் கடந்து பரவவில்லை. ஆனால் தமிழ் நாடு கடந்தும் 7-ம் நூற்றாண்டு கடந்தும் சம்பந்தர் பெயர் பரந்துள்ளது. அப்பர் பெயர் பரவவில்லை! இது ஏன்? சம்பந்தரே இயக்கத் தலைவர். அப்பர் அவர் வலையில் விழுந்த ஒரு கையாள் மட்டுமே. அப்பரை இழுக்க அவர் தமக்கையும், பாண்டியனை இழுக்க அவன் மனைவியும பயன் பட்டனர். இக்கதை முகலாய அரசர். மதுரை நாயக்கமன்னர் அரசியல் சூழ்ச்சிக் கதைகளிலிருந்து வேறுபட்டதல்ல. இவற்றைப் படித்தபின் சமயக் கதைகளை வாசிப்பவர் கண்கள்

பேரளவு உண்மை நிலையை உணரும் திறம் அடையும் என்பது உறுதி.

இந்நூல் சமயத்தை எதிர்ப்பதற்காக எழுதப் பட்டதன்று, சமயப் போர்வையிலும் மொழிப் போர் வையிலும் ஆரியப் பண்புகளும் ஆதிக்க அரசுகளும் தமிழர் வாழ்வை எவ்வளவு பாழ்படுத்த இடமேற்படு கிறது என்பதையே இது காட்டுகிறது.

அன்பர் நீல துரைக்கண்ணனின் கலைச்சித்திரம் உண்மை வரலாற்றுக்கும் தமிழ்ப் பண்பாட்டு விளக் கத்திற்கும் நல்ல வழிகாட்டியா யமையும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். பிரிந்து கெடும் தமி ழன், சூதின்றி நம்பிக் கெடும் தமிழன், தானும் திருந்தி, இதுபோலப் பிரிந்தும் நம்பியுங்கெடும் தன் இனத் தோழர்களுக்கும் நல்ல வழி காட்டுவானாக.

சென்னை
8—4—52

**கா. அப்பாதுரை**, M.A., L.T.

## ‘தமிழர் வீழ்ச்சி’

### சிவபாத விருதயர் சூழ்ச்சி

சீர்காழியில் சிவபாத விருதயர் வீட்டில் வைதீக பிராமணர்கள் கூடி ஓமம் வளர்த்து வேத கோஷம் செய்துக் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் சிவபாத விழிதயரும் அவர் மனைவியாரும் ஓம குண்டத்தின் எதிரில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து தங்கள் குழந்தையை மடிமீது வைத்துக் கொஞ்சிக்கொண் டிருக்கிறார்கள், பிராமணர்களும் பிராமணப் பெண் மக்களும் அந்த அருள் குழவியின் பாதத்தைத் தொட்டுத் தடவி தங்கள் கண்களில் ஒத்திக்கொண்டு போகிறார்கள், சிலர் நின்றபடியே குழந்தையை வணங்கினார்கள். வைதீகச் சமயத்தைச் சார்ந்த கபாலிக, வாம மார்க்கத்தினரும் சில தமிழ் மக்களும் அந்த தெய்வக் குழந்தையை வாழ்த்தி வணங்கிச் செல்கின்றார்கள், அவ்வீட்டின் வெளியே வெள்ளம் போலக் கூட்டம் நிற்கின்றது. ஒரு பிராமணர் அக் குழந்தையின் மகத்துவத்தைப் பற்றி பின்வருமாறு பிரசாரம் செய்து வந்தார்,

“சிவபாத விருதயர் தன் குழந்தையுடன் குளத்திற்கு நீராடச் சென்றிருந்ததாகவும, அக்குழந்தை

யைக் கரையின்மீது படுக்க வைத்துவிட்டு விருதயர் குளித்துக்கொண் டிருந்ததாகவும், அச்சமயம் சிவ பெருமான் பார்வதியோடு வந்து குழந்தையைப் பார்த் ததாகவும் அப்பொழுது அக்குழந்தை அழவே அதற் குப் பார்வதியார் பரிந்து தனது முலைப்பாலை ஊட்டிய தாகவும் அதன் பின்னர் குழந்தைக்கு ஞானம் பிறந்து சிவபெருமானையும், பார்வதி யம்மையாரையும் நேரே கண்டு தரிசித்ததாகவும், அந்த பாக்கியம் சிவபாதவிரு தயருக்கும் கிடைத்ததாகவும், அதற்காக இன்று கொண்டாட்டம் நடைபெறுவதாகவும் மொழிந்து கொண்டிருந்தார் இதனைக் கேட்டப் பாமர மக்கள் இவை யனைத்தும் உண்மை யென்றேநம்பி அந்தக் குழந்தையையும், அதன் பெற்றோர்களையும் வணங்கிச் சென்றனர். சோழ நாடெங்கும் திருமுலைப்பால் பேச் சாகவே திகழ்ந்தது.

இவ்வாறு இவர்களது முதல் சூழ்ச்சி ஒருவாறு வெற்றிப் பெற்றது. இதன் பின்னர் சம்மந்தன் நல்லக் கலைஞனாக விருக்க வேண்டுமே! அதற்காக நல்ல கல்வி கேள்விகளிற் சிறந்த பிராமணப் பண்டிதர்கள் இரு வரை அக்குழந்தைக்கு ஆசிரியராக நியமித்தார்கள், இதன் பயனாக பையன் நல்ல அறிவு பெற்று விளங்கி னான், திருமுலைப்பால் உண்டதின் காரணமாகவும், சம்மந்தன், ஆசிரியரின்றியே நல்ல ஞானம் பெற்று விட்டாறென்றும், அதனால் இவரை ஞான சம்பந்தன் என்று பெரியார்கள் அழைக்கின்றார்களென்றும் பிர சாரம் செய்து வந்தார்கள்.

இவ்வாறு பிராமண சமூகம் தங்களா லியன்ற வரை எங்கெங்குச் சென்றாலும் அங்கெல்லாம் சம்பந்த

ரின் திருமுலைப்பால் செய்தியைப் பரப்பாமலிருப்ப தில்லை, பகுத்தறிவு இயக்கத்தினர் வதியும் நந்தமிழ் நாட்டில் எவ்வளவுதான் இந்த பிராமணர்கள் சூழ்ச்சிப் பிரசாரம் செய்தாலும், படித்தவர்களும், அரசர்களும், அறிஞர்களும், செல்வந்தர்களும் இவர்கள் மாய வஞ்சக வலையில் வீழவில்லை. ஒரு நாள் சிவபாத விருதயர் வேள்விச் செய்ய பொருளில்லையே வென்று ஏங்கி தன் மனைவியிடம் வருத்தப்படடுக் கொண்டிருந்தார், இத னைக் கேட்டுக் கொண்டிருந்த சம்பந்தர், தந்தையார் பொருளின்மையால் வருந்தும் துன்பத்தையும், தன்னா லும் பொருளுதவி செய்து தந்தையின் துயரத்தை மாற்றும் ஆற்றலும் இல்லாத நிலமையையும் எண்ணி மிக வருத்தத்தோடு பாடுகின்றார்.

''இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ யெமை யாளுமா றீவா
தொன்றெ மக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள்
ஆவடு துறையானே !''

—(சம்மந்தர் தேவாரம்)

என ஆவடு துறையானைப் பாடும் ஒவ்வொரு தேவாரப் பாக்களிலும், ''ஈவதொன்றெமக் கில்லையேல்'' ஈவ தொன்றெமக் கில்லையேல்'' என்று சிவபெருமானை நோக்கிப் புலம்பி அழுதார். இவர் அழுகுரலைக் கேட்டு சிவபாத விருதயர் தன் மகனை அணைத்து அப்பா

---

பெரிதாய முக்தியைப் பல்லோர்க்கருளுனற் பிள்ளைபெற்றும்
அரிதாய பொன் கொண்டு சீர்காழி அந்தணனுங் கிழவன்
பரிதாப மின்றி பசுவதைத்தான் யென்ன பாவமந்தோ
எரிதாங்கி பொன்னம்பலத்தே நின்றுடிடும் என்னப்பனே.

தில்லைத்திருவாயிரம்.

அழாதே ! எவ்வாருயினும் இந்த தமிழர்க் கொள்கை களை அழித்து நமது எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுவோம். நம் வகுப்பார் வாழ்வதற்குரிய வழி யைத் தமிழ்நாட்டில் தேடியாகவேண்டும். அதற்காக நமது குடும்பமே தியாகம் செய்யவேண்டும்: வெற்றிப் பெற்ருல் நம்மவரெல்லோரும் இடரின்றி இல்லறம் நட த்தமுடியும், உன்னை ஒரு தெய்வீகக் குழந்தையாக கற் பனை செய்த நோக்கமும் அதனைக் கருதித்தானே ! உன்னைக் கொண்டே இன்னும் பல சூழ்ச்சிகளை செய்ய எண்ணியுள்ளேன் அஞ்சாதே நான் யிருக்கும் வரை உனக்கு அச்சம் வேண்டாம் என்று தேற்றினர்.

உடனே சம்பந்தருக்கு கோபம் வந்துவிட்டது. கண்களில் கோபப் பொறி பறக்க நெற்றி வியர்க்க உதடு துடிக்க ஆத்திரத்துடன் எதிரே நிற்கும் தந்தை யாரைப் பார்த்து ஐயா நமது வைதிகத்திற்கும் வேத வேள்விக்கும் விரோதிகளாய் வேதத்தையே குறை கூறும் அவர்களை வெல்லாத வரையில் இவ்வீடு திரும் புவதில்லையென சபதங்கூறி வேகமாக எழுந்தார். சம் பந்தனின் ஆத்திரத்தையும் இனத்தின் பாலுள்ள பற் றினையும் கண்ட தாய் தந்தையர் மகிழ்ச்சியில் ஆழ்ந்து சம்பந்தா ! எங்கள் ஞானக்குழந்தையே ! இன்றுதான் நாங்கள்உன் உள்ளத்தை அறிந்தோம். எவ்வாருகிலும் நம்முடைய முயற்சி வெற்றி பெற வேண்டும். ஆரியக் கொள்கையைப் பரப்புவதற்காக தந்திரங்களைக் கையா ளவேண்டும். நமக்கோ தமிழ் நாட்டில் ஆதரவு இல்லை; அதற்கான முயற்சிகளை மற்ற நம் சாகாக்களோடு யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ வெளியேற யிது தக்க சமயமல்ல, அதினும் தனித்து சென்று நீ என்ன

செய்ய முடியும்? நம்மோடு சில தமிழர்களின் கூட்டுற வையும், அற்புதச் செயல்களையும் சம்பாதித்துக் கொண்டுதான் வெளியே புறப்பட வேண்டும், அது வரை நீ பொறுத்திருந்தால் நலம் என்று வேண்டிக் கொண்டார் விருதயர். அவரும் அதற்கிசைந்தார்.

சில நாட்கள் சென்ற பின்னர் ஒரு நாள் திடீரென சம்பந்தர் வீட்டில் பெருங்கூட்டம், பிராமணர்கள் எல் லோரும் கூடி ஒரே ஆரவாரம் செய்கின்றார்கள் அர ஹர நமசிவாயா வென்றும், பார்வதிபதே ஹே என் றும் கோஷிக்கின்றார்கள். வீதிகளெங்கும் கூட்டம் ஊராரெல்லாம் திரண்டு ஓடி வருகிறார்கள் ! சிவபாத விருதயர் புண்ணியமே புண்ணியம் ! பகவதியின் பாக் கியமே பாக்கியமென்று பரவசமடைகின்றார்கள். சிவ பெருமானின் திருவிளையாடல் தானென்னே ! என இறும்பூ தெய்துகின்றனர்; முன்னே பார்வதியின் முலைப்பாலைத் தந்தார். இன்று முத்துப் பல்லக்கையும் பொன் தாளத்தையும் தந்தார். ஞானசம்பந்தனின் பிற ப்பே பிறப்பு! அவர் மானிடப் பிறவியல்ல தெய்வப் பிற ப்பு என்று உரையாடி ஞானசம்பந்தரைத் தொழுதுக் கொண்டு, முத்துப் பல்லக்கையும், தாளத்தையும் வலங்கொண்டு. வணங்கிச் சென்றார்கள்.

இவ்வாறு சம்பந்தரில்லம் மூன்று நாட்கள் பெரும் காட்சியாகவே விளங்கிற்று, அங்குள்ள பிராமணர்கள் சிவபாத விருதயர் செல்வக்குமாரராகிய நமது ஞான சம்பந்தனை ஊர் ஊராகச் சென்று சைவ சமயப்பிரசா ரம் செய்வதற்காக நமது ஆண்டவன் கைலாசபதி இந்த முத்துப் பல்லக்கையும், தாளத்தையும் சம்பந்த

ருக்கு அனுப்பிவைத்தாரென்று விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்கள் இதனுல் தமிழ் நாட்டில் சில பகுதிகளிலுள்ளவர்களுக்கு இந்தக் கைலாச கற்பனேயும் நன்கு பரவலாயிற்று, தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் சீர்காழிவருவதும், ஞானசம்பந்தனேயும், கைலாசப்பல்லக்கையும் வணங்கி செல்வதுமாக விருந்தார்கள்.

இக்காட்சிகளே எல்லாம் கண்டு 'ஆனந்த சாகரத்தில் மூழ்கியுள்ள சம்மந்தர் ஓர் நாள் தாயைப் பார்த்து அம்மா! பார்த்தீர்களா எனது தந்தையாரின் தந்திர ஜாலவித்தையை? தமிழர்கள் இதனே உண்மையெனவே நம்பிவிட்டார்கள்! அவர்கள் பய பக்தியுடன் என்னேயும். பல்லக்கையும் தொழுகின்ற நிலேயைப் பார்த்தால். இவர்களே எவ்வளவு சுலபமாக அடிமைகளாக்கி நமது ஆரிய தருமத்தை நிலேநாட்ட முடியும் என்பதை விளக்குகின்றதல்லவா? என்ருர். அதற்கு அங்கு சிவபாதவிருதயர் சம்பந்தரின் உரையாடலேக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார். சம்பந்தா! அவசரப் படாதே தமிழர்களே அவ்வளவு கேவலமாக நினேத்து விடாதே! நபது வைதீகத்தைச் சார்ந்த சிலரையும், மாடனேக் காடனே வேடனேப் போற்றும் மக்களேயுங் கண்டு ஏமாந்து விடாதே! தமிழர்களில் பெரும் பாலோர் அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள். அவர்கள் பொய் தீர் காட்சியோர் (பகுத்தறிவையுடையவர்கள்) நிறுத்து. அறுத்துச் சுட்டு உறைத்துப் பொன் கொள்வார் போல் அறத்தினேயும், ஆராயும் அறிவுள்ளவர்கள். அவர்கள் தர்க்கத்தில் வல்லவர்கள், நம்முடைய வேதங்களில் குறை காண்பவர்கள். நமது

வேதத்திலேயே இவர்களை வெறுக்கப்பட் டிருக்கின் றது. அவிரதர், அன்னியவிரதர், அயக்ஞர். அன்றிக் அப்பிராமணர் எனப் பலவாறாக அவர்களை தூஷிக்கப் பட்டுள்ளது. தேவ மூடம், பாஷண்டி முடம், லோக மூடம் என்ற மும்மூடங்களை ஒழித்தவர்கள். நாம் புரியும் வேள்விகளுக்கோ இராவணன் காலத்தி லிருந்தே எதிர்ப்பு, இத்தகையவர்கள் நமது கொள் கைகளை அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுக் கொள்ளுவார் களா ? இப்போது கபாலிக மக்களும், வாம மார்க்கிக ளும் இந் நாட்டில் நல்ல வேலை செய்து வருகிறார்கள். அவர்களைக் கொண்டுதான் இந்த நாட்டினரை அடி மைப் படுத்த முடியும்.

நாம் அடுத்த வாரம் கிராமப்பிரச்சாரத்திற்குப் புறப்படவேண்டும். உன்னை அந்த அற்புதப் பல்லக்கில் அமர்த்தி பல பிராமணோத்தமர்கள் வேத கோஷடம் செய்துக்கொண்டு வருவார்கள். நானும் உன் தாயாரும் வேறு பல்லக்கில் வருவோம். அவ்வாறு நாம் யாத்தி ரைச் செய்ய ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறேன். நீமட்டும் உன்னுடைய சொற்பொழிவை உணர்ச்சி யோடும், ஊக்கத்தோடும் அழகுபட ஆற்றல் வேண் டும். அப்பிரசங்கத்தில் அம்பாள் ஆகமங்களைப் பற்றி நன்கு விளக்கிப் பேசவேண்டும், காளி, மாரி, பிடாரி, துருக்கை முதலிய தேவதைகளை 'வழிபட உயிர்ப் பிராணிகளைப் பலியிடுதல் தர்ம சாஸ்திர முறைப்படி அவசியமென்றும் வற்புறுத்திப் பேசவேண்டும். நாம் நமது வேத வேள்விகளில் உயிர்க் கொலை புரிதலை உதா ரணமாகக் காட்டலாம். சிவபெருமான் நரபலியை

விரும்பினூர் என்பதற்கு சிறுத்தொண்ட நாயனூர் சரித்திரத்தையும், புலாலுண்ணல் தவறல்லவென்பதற்கு கண்ணப்ப நாயனூர் அளித்த ஊனினை சிவபெருமான் மறுக்காது உண்டுகளித்த மகாத்மியத்தையும் விளக்கிப் பேசலாம். இதனூல் தமிழர்களின் அன்புநெறி ஆட்டங்கொடுத்து விடும். ஏனெனில் நமது கொள்கை எளிதாக விருக்கின்றது. மாரி, பிடாரியை வணங்கி வரும் பாமர மக்கள் அனைவரும் நம்முடன் சேர்ந்துக் கொள்ளுவார்கள். கபாலிகர்கள், குடிப்பதை மத சம்பந்தமாகப் பிரசாரம் செய்து வருகிறூர்கள். நமது இயக்கமோ புலாலுண்ணலைத் தடை செய்யவில்லை. ஆகவே பாமரமக்களும், தமிழர்க்குற்ற உயரிய ஒழுக்க நெறியைத் தழுவ முடியாமல் விழிக்கின்ற சில பொது மக்களும் நமது வைதீக சமயத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள். சம்பந்தா கபாலிகர்களைப்பார்! வீதிகளிலே சென்று நமச்சிவாயவென்று குடித்துவெறித்துஆடுகின்றூர்கள். நாமும் கபாலிகத்தை ஆதரித்துப் பேசினூல் நமது இயக்கம் வலுப்படுமென்று விருதயர் விளக்கினூர். இதனைக் கேட்டச் சம்பந்தர் உணர்ச்சி உள்ளத்தை உந்த அப்பா! தங்களுடைய அருமையான ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுகின்றேன். தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற அடியேன் கடமைப் பட்டிருக்கிறேன். தாங்கள் பிரசாரத்திற்கு வேண்டிய சகல ஏற்பாட்டையும் துரிதமாகச் செய்யுங்கள். நற்காட்சி! நற்காட்சி என்று பகுத்தறிவைப் பரப்பி வைதீக சமயத்தைப் பழித்து வேத வேள்விக்கு உலைவைக்கும் அந்த தமிழர் சமய பாவிகளைச் சீக்கிரத்தில் அழிக்கின்றேன்! அஞ்சாதீர்கள் என்று வீரவுரைப்பகன்றூர் விற்

பன்ன சம்பந்தர்; சிவபாத விருதயரோ ஆனந்தக் கண்ணீர்ச் சொரிந்தார். மகனைக் கட்டி முத்தமிட்டு குழந்தாய் உன் வீரவுரை என் மனப்புண்ணை ஆற்றுகி றது. இப்போதே ஆவனச் செய்கின்றேன். வா ஆகா ரத்திற்குச் செல்வோம். போகிறுர்கள்,

## திருநாவுக்கரசர் (அப்பர்)

திருவாமூரில் புகழனுர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் வைதீக சமயத்தின் கிளைகளில் ஒன்ருகிய கபா லிக சைவத்தைச்சேர்ந்தவர் அவருக் ரு மாதினியார் என் பவர் வாழ்க்கைத் துணைவியாக விருந்தார்கள், இவர்க ளிருவருக்கும், ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் இருந்தன.

பெண் குழந்தைக்கு திலகவதியார் என்றும், ஆண் குழந்தைக்கு திருநாவுக்கரசு வென்றும் பெயரிட்டு அழைத்து வந்தார்கள். திருநாவுக்கரசர் கல்வி கேள்வி களிற் சிறந்து விளங்கினர். திருவாமூரில் கபாலிகத் தைச் சார்ந்தவர்கள் அதிகமில்லை. பெரும்பாலும் தமி ழர் சமயத்தவர்களே, ஆதலால் 'திருநாவுக்கரசர் தனது வைதிக கொள்கையாகிய கபாலிகத்தைப் பரப்ப வியலாமல் விழித்தார். கபாலிகச் சமயம். குடிப்பதை யும், காதல் துய்ப்பதையுமே கடவுள் வழிபாடாகக் கொண்டது. ஊனுண்ணல் அவர்களுக்கு சர்வசாதா ரணம். நாலும் இரண்டும் கற்றவர்களிடம் வாயும் தடி யும், காட்டாதீர் என்ற பழமொழிப்படி நாலடியாரை யும், திருக்குறளையும் படித்து இன்புற்று வாழும் பண்புடை மக்களிடம் இவர் தம் கொள்கை ஏற்

குமா? ஆகவே அடிக்கடி வெளியூர்ச் சென்று அங்குள்ள கபாலிகருடன் அளவளாவி வந்து சேருவார். இவ்வாறு ஒரு நாள் வெளியூர் சென்றபோது வழியில் ஏராளமானக் கூட்டம் செல்வதைப் பார்த்தார். அவர்கள் புதுப் பாளையம் சொல்வதாகவும் அங்கு ஒரு பிராமணச் சிறுவன் விஜயம் செய்து அரிய பிரசங்கம் செய்ததாகவும், அவ்விப்ரருக்குச் சிவபெருமான் முத்துப் பல்லக்கும், பொற்றுளமும் அளித்திருப்பதாகவும் அவைகளின் துணையால் ஊர் ஊராய்ச் சென்று வைதீக சமயத்தைப் பரப்பி வருவதாகவும் கேள்வியுற்று திருநாவுக்கரசரும் அங்கு சென்றார். கண்டார் சம்பந்தரை சாஷ்டாங்கமாக வணங்கினர். அவரும் இவரை ஆசீர்வதித்து குசலம் விசாரித்தார். பின்னர் இருவரும் பன்னாட்ப் பழகிய நண்பர்களைப் போலவும், குருசிஷ்யருக்குள்ள பக்தர்களாகவும் மாறிவிட்டார்கள். பிறகு கேட்க வேண்டுமா! காரிருளில் கலங்கும் ஒருவனுக்குக் கைவிளக்கு கிடைத்ததைப் போல் திருநாவுக்கரசருக்கு சம்பந்தர் கிடைத்தார், தினந்தோறும் திருநாவுக்கரசர் தன் தமக்கையாரோடு ஞானசம்பந்தரின் ஞானப் பிரசங்கத்தைக் கேட்கப் போய்க் கொண்டிருந்தார்.

## சதியாலோசனை

திருநாவுக்கரசரும், சம்பந்தரும் தங்கள் வைதீக சமயத்தை நிலை நாட்ட சிவபாத விருதயரோடும் மற்றும் சில பிராமணரோடும் கலந்து சதியாலோசனை செய்தார்கள், அந்த சதியின்படி அப்பர் போலி சமண சந்நியாசி வேடம் புனைந்து பாடலி புரத் (திருப்பாதிரிப்புலியூர்)திலுள்ள சமண மடத்தில் சேரவேண்டு

மென்றும், சிலநாள் கழிந்து அப்பருக்கு வயிற்றுவலி யுண்டாவதாகவும். அதன் பிறகு அப்பரின் தமக்கை திலகவதியாரின் வேண்டுகோளுக்கிணங்கி ! அப்பருக்கு சிவபெருமான்வயிற்றுவலி உண்டாக்குவதாகவும்,அவர் தன்னைப் பணிந்து பாடினால் வயிற்றுவலியை தீர்த்து விடுவதாகக் கனவில் தோன்றி கூறினதாகவும் பின்னர் அப்பர் தமக்கையிடம் சென்று வீரட்டானரைப் பாடி சைவமதம் புகவேண்டு மெனவும் தீர்மானிக்கப் பட்டது.

## சம்பந்நரும் அவர் தம் தந்தையாரும்

சிவபாதவிருதயர், அந்தணர் குழுவில் அமர்ந் திருந்த தம் மைந்தர் சம்பந்தரை நோக்கி சம்பந்த மூர்த்தி ! என்னருமைச் செல்வ ! இனி நமக்கு வெற்றி நிச்சயம் ! நம் காலிற்றைத்துள்ள ஒரு முள்ளை மற் றொரு முள்ளைக்கொண்டே களையவேண்டும் அது போன்றதே நம்மியக்கமும்; ஆகவே நாம் அப்பரைக் கொண்டே அவர் இனத்தவராய தமிழர்களை நமக்கு அடிமையாக்கிக் கொள்ளலாம். தமிழரது சமரசக் கொள்கையை வீழ்த்த அப்பரின் சேவை அவசியத்தி லும் அவசியம் வேண்டற்பாலதாகும். அதனால், அவ ரைச் சிலகாலம் நமக்கு சமமான அந்தஸ்திலேயே வைத்துப் பேசவேண்டும் என்றார். இதனைக்கேட்ட சம்பந்தரும் ஏனைய அந்தணர்களும் அவர் கருத்தை முழுமனதுடன் ஏற்று ஆரவாரித்தார்கள்.

## அப்பர் போலி சந்யாசியாதல்

திருநாவுக்கரசர் தம் தமக்கைத் திலகவதியாரிடம் விடை பெற்றுக்கொண்டு துறவி வேடந்தாங்கி

நேராக திருப்பாதிரிப் புலியூர் சமண மடத்திற்கு சென்ருர். அங்கு சென்று அம்மடத்திலிருந்த சமண சந்யாசிகளிடம் சமண சமயக் கொள்கைகளில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகவே அந்நூல்களை நன்கு பயில வந்தேனேன்றும் அப்பர் சொல்ல சமண முனிவர்களும ஏற்றுக்கொண்டார்கள். நாளடைவில் அப்பர் சமண சமயக் கொள்கை நூல்களை கற்றுத் தெளிந்து மிக மதி நுட்ப முள்ளவராகத் திகழ்ந்தார். அப்பரின் திறமையைக் கண்டு அச்சமண முனிவர்கள் திருநாவுக் கரசருக்கு தருமசேனர் என்ற பெயரை வைத்து மிகவும் போற்றினுர்கள். இப்படி சிலகாலம் கழிந்தன !

## அப்பரின் வயிற்றுவலி

ஒரு நாளிரவு அப்பர் தமக்கு வயிறு வலிப்பதாகப் பாசாங்குச் செய்தார், அவ்வயிற்று வலியைப் பொய்யென்றுணராத கபடமற்ற சமண சாதுக்கள் அந்நள்ளிரவில் அவருக்கு வேண்டிய சகல மருத்துவங்களும் செய்தார்கள் ஆனுல் அப்பாழும் வயிற்றுவலி பன்மடங்குவளரலாயிற்றே யன்றிக் குறைந்திலது, புரண்டு துடிக்கின்ருர், புதர் மறைந்து புள் பிடிக்கும் அப்பர் சில சாதுக்களும் அவருக்கு ஒத்தடம் முதலிய சிகிச்சைகளைச் செய்துக் கொண்டிருக்கின்ருர்கள். பொழுதும் புலர்ந்தது. தக்கோராய மருத்துவர் பலர் வந்தனர் மருந்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு மாருக வலி நாழிகைக்கு நாழிகைவளரலாயிற்று. உண்மை நோயாகில் ஒரு நொடியில் அகன்றிருக்கும். அப்பருக்குத்தான்

அவ்விதமில்லையே! அதனால் நோயும் நீங்கின பாடிலது. அப்பரின் நடிப்பு அந்த அளவிற்கு அங்கிருந்த சமண சாதுக்களைக் கலக்கிற்று. சமண சாதுக்கள் தங்களின் இயற்கையான அருள் உள்ளத்தால், அன்பின் பெருக்கால் அப்பரின் ஆற்றெணுத்துயரைக் கண்டு வருந்தினார்கள். நான்கு நாட்கள் இடைவிடா சிகிச்சைகள் செய்தும் அப்பரின் வலி நகர்ந்தபாடில்லை. போலியாகப் புலம்புகின்றார் புகழனூர் புதல்வர்! இதை யின்னுமறியாத சாதுக்கள் அப்பர் விரும்பியபடி அவர் தமக்கைத் திலகவதியிருந்த அப்பரின் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பப்பட்ட அப்பரும் வெற்றியுற்றோம் என உள்ள மகிழ்ச்சியுடன் போலியாக விடைபெற்று வெளியேறிவிட்டார்!

## இரு போலியர்கள்

திருவாமூரில் திகழ்ந்த திலகவதியார் தாம் தம் தம்பியுடன் முன்பே செய்திருந்த முன்னேற்பாட்டின் படி தன் தம்பியின் வருகையை அறிந்து தம் நெற்றியில் விபூதியை அணிந்துகொண்டு நமச்சிவாயா! அரஹர! சிவ சிவா! சம்போ! மஹாதேவா! எனக்கோஷமிட்டுக்கொண்டு வீதிவலம் வந்தாள். அப்போது தன்னைப் பின்பற்றிப்பலர் தொடர்வதைக் கண்ட அவள் ஆவேசம் வந்தவள் போல் ஆர்பரித்து "என் தம்பி வருகின்றார்! சமணத்தை விட்டு (சைவராக) சைவம் புகுவார், இவ்விஷயத்தை வீரட்டானேசுரராகிய சிவபிரான் என் கனவிலெ மொழிந்தார்! அதோ வருகின்றார் என் தம்பி அவரை வரவேற்க அனைவரும் வாருங்கள்" என்று ஆவேசத்துடன் கூறிச் சென்றாள். வைதீ

கப் பிராமணர்களும், கபாலிகச் சைவர்களும், ''என்னே! சிவபெருமானின் திருவிளையாடல், எனப்போற்றிப் புகழ்ந்துக் கொண்டே பின் சென்றார்கள். அவர்கள் ஊரின் கோடியை அடைந்தார்கள். அப்பர் தம் தீராத வயிற்று நோயுடன் தம் தமக்கையைக் கண்டு தாவினார்; திகலவதியும் தம்பீ! ஐயோவென அலறினார். நாவுக்கரசர் தம் தீராத சூலையைப் பற்றிப் பலரும் அறியப் பறைசாற்றினார், பரதவித்தார். பதைத்தார். உடனே திலகவதி தம்பி! வருந்தாதே! இந்நோயை நீ சிவபிரானின் திருவருளால் வழங்கப் பெற்றாய்; அவர் உன்னை ஆட்கொள்ளவே உனக்கித்தகைய உபத்திரவத்தை உண்டாக்கினார். பாழான சமணரிடமிருந்து உன்னை மீட்கவே இத் தீரா நோயைத் தந்தருளினார். அருளிய பின் நேற்றிரவு என் கனவிலும் தோன்றி யருளினார், அப்படித் தோன்றிய அக்கருணாநிதி உன்வருகையையும் எளியாளாகிய எனக்குத் தெரிவித்துமறைந்தருளினார், அதனாலேயே நான் உன்னை சந்திக்க இப்பொழுது இங்கு வந்தேன். நீ இங்கு வந்தவுடன் உன்னைத் தம்மாலயத்திற்கு அழைத்து வருமாறு ஆணையுமிட்டார் அவ்வருட் பெருங்கடல். ஆகவே நாம் அங்குச் செல்வோம் வா. சென்ற பின் இச் சூலைநோயும் சொல்லாமற் சென்று விடும் உன்னைவிட்டு அஞ்சாதே! என்று ஆறுதல் கூறினள். அனைவரும் சிவபெருமானின் திருவிளையாடலைப் புகழ்ந்து கொண்டே வீரட்டானம் விரைந்து சென்றார்கள்.

யாவரும் வீரட்டானம் சேர்ந்த பின் நாவுக்கரசர் தம் தந்திர வயிற்று வலியைக் கைவிடாது தவித்துக் கொண்டே தல நாயகன் ஆலயத்தை வலம் வந்தார்.

வந்தவர் சிவலிங்கப் பெருமானை மெய்சிலிர்க்கத் தரிசித்தார். ஆனந்தக் கண்ணீர் வடித்தார். செல்வமே! சிவபெருமானே! தீராத வயிற்று நோயால் வாடுகின்றேன். பாவியேன் பரமனை உன்னை மறந்தேன் சமணமாம் படுகுழியில் வீழ்ந்தேன். சைவமதமாம் கரும்பிருக்க, அதைக் கொள்ளக் கருதாது சமணமாம் இரும்பைக் கொண்டு இன்னலடைந்தேன். தற்போது என் தவற்றையுணர்ந்தேன், தடையின்றித் தங்களைச் சரணடைந்தேன் தயாநிதே! என் தமக்கையாம் திலகவதியின் கனவில் தோன்றித் தம் அருளை அன்னவட்கு அருளியவாறே பாவியேன் பதிதனாயினும் பவித்திரனாகி நின் பாதத்தைப் பற்றினேற்கும் அருள்பாவிக்க வேண்டுகின்றேன் அய்யனே! அமலனே! அன்புடைச் சிவனே! என்று பதிகம் பல பாடிப் பாராட்டினார். என்ன விந்தை! பாடிய பின்னர் தம் சூலை நோய் பறந்து மறைந்ததாகப் பகர்ந்தார், ஆனந்தத் தாண்டவம் ஆடினார்! பகட்டு மொழிகளால் பசப்பினார். குதித்தார், குலாவினார், கூவிக் கூவிக் குழைந்தார். இவற்றையெல்லாம் நேரிற் கண்டும், கேட்டுக்கொண்டும் இருந்தவர்களாகிய பொதுமக்கள் இவையாவும் உண்மையென்றே கொண்டனர். அப்பரை அவர் கொண்ட சமணத்தினின்றும் நீக்கி சைவத்தில் சேர்க்க அமலனாய சிவபிரான் கையாண்ட சூழ்ச்சியாம் சூலையைப் பாராட்டிப் பேசினார்கள், படித்தோரும் பாமரரும் தம் பக்திப் பிரதாபம் அதிகரிக்க அப்பரைக் கொண்டாடத் தலைப்பட்டனர். அவர் தம் அடிபணிந்து ஐயனே அப்பரே! அரும்பெருஞ் செல்வ! என்று வணங்கினார்கள், சமணம் ஒழிக ! சைவம் ஓங்குக ! அறிவு மார்க்கம் ஒழிக!

பக்தி மார்க்கம் வாழ்க! என ஓலமிட்டனர். அவர் தம் ஓலம் அக்கோவிலை அதிரச்செய்தது! இவ்வாறு இவர் தம் சூழ்ச்சி ஒருவாறு பலித்தமை கண்ட இரு போலியரும் இறும்பூதெய்தினாராகி இல்லம் எகினர்.

பின்னர் நாவுக்கரசர் இச்செய்தியை சம்பந்தருக்கு விளக்கமாக விவரித்தார். அப்பரும், அவர் தமக்கையாள் திலகவதியும். ஆய இருவரும் கிராமங்கடோறும் சென்று சிவபெருமான் வயிற்று வலியை உண்டாக்கித் தன்னை மதமாற்றிய வரலாற்றை பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

ஆங்காங்கே சமயப் பிரசாரமும் செய்ய தொடங்கினார். தம் பக்தி மார்க்கக் கொள்கையோடு தமிழர் கொள்கையாகிய சமண தருமத்தில் தாமறிந்த சில நீதிகளையும், திருக்குறள் நாலடியார் போன்ற அற நூல்களின் மேற்கோள்களையும் கலந்து பிரசங்கம் செய்தார். சிறு தெய்வ வழிபாட்டை வன்மையாகக் கடிந்தார். இவர் சொற்பொழிவைக் கேட்ட வைதீகச் சமயத்தவரும், கபாலிகரும் இவர் இவ்வாறு முறண்படப் பேசுவதைக் கண்டு இவர் மூளைக் கோளாறுடையவராகவாவது அல்லது சமண சமயப் பற்றுடைய வராகவாவது இருக்கவேண்டும் என்று சந்தேகங் கொண்டார்கள். வைதீகச் சமயத்தவரில் சில பிராமணர்கள் இவர்தம் முரணை அதாவது கதம்பக் கொள்கைகளைப் பற்றி ஞான சம்பந்தருக்கு ரகசியமாக அறிவித்து விட்டனர்.

# அப்பருக்கு வந்த அவசர அழைப்பு

ஒருநாள் அப்பருக்கு ஒரு சுருள்ஓலை வந்தது. அதனை அவர் வாங்கிப் படித்தார். அது வருமாறு :

சைவ சிகாமணியே ! நீவிரும், நும் தமக்கையாம் திலகவதியாரும், ஆய இருவரும் திருவையாற்றிற்கு வர விரும்புகிறேன், தங்கள் சொற்பொழிவை இந் நாடும் கேட்க விரும்புகின்றது. தயவு செய்து உடனே புறப்படுக.

இங்ஙனம்,
அம்மையின் அருட்பாலுண்ட
ஆளுடைய பிள்ளை.

என்றிருந்தது. இதைக் கண்ணுற்ற அப்பர் அளவிலா ஆனந்தமடைந்தார். அவரும், அவர் தமக்கையும் உடனே ஐயாற்றை நோக்கி நடந்தார்கள். திருவையாற்றில் இவர்களை வரவேற்கச் சிறந்த ஏற்பாடுகள் அமைந்திருந்தன. எங்கும் கண்டிராக் காட்சிக்கிடனுய்க்கவின் பெற்றுக் காணப்பட்டது. அய்யாறு ! திருநாவுக்கரசர் வாழ்க ! திலகவதியார் வாழ்க ! வாழ்க சைவம் ! வீழ்க சமணம் ! வருக அடிகளார் வருக ! வருக ! என வரவேற்புரைகளின் ஒலி வானைப் பிளந்தது. பின்னர் இருவரும் பல்லக்கில் ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பந்தர் இருப்பிடத்தையடைந்தவுடன் அப்பரும், அவர் தமக்கையாரும் பல்லக்கிலிருந்து இறங்கி சம்பந்தர் திருவடிகளில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து நமஸ்கரித்தனர். சம்பந்தர் அப்பரைக் காட்டிலும் ஆண்டில் இளையவராயினும் அவர் பிராமணோத்தமர் அல்லவா ?

அக்காரணத்தால் இருவரும் அவ்வாறு வணங்கினர் கள். இளையவராகிய சம்பந்தரும் தம்மை வணங்கிய முதியவரான அவர்களை ஆசீர்வதித்து தம் இருப்பிடத் திற்கு அழைத்துச் சென்றார்.

மறுநாள் அப்பரின் பிரசங்க விளம்பரம் எங்கும் விளம்பப்பட்டது, நூற்றுக் கணக்கான மக்கள் பிரசங் கத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள், சொற்பொழிவுத் தொடங்கப்பட்டது. அப்பர் தம் வாழ்க்கை வரலாற் றையும், தெய்வ பக்தியையும் பற்றி வழக்கம் போலவே பேசினர். சம்பந்தரும், அவர் தம் தந்தை சிவ பாத விருதயரும் அப்பரின் சொற்பொழிவை அன்போடு கூர்ந்து ஒன்றுவிடாமல் கேட்டு வந்தார்கள். பொது மக்களும் அவர் பேச்சில் மூழ்கி ஈடுபட்டிருந்தார்கள். பிரசங்கம் முடிந்தது. அனைவரும் அப்பரின் பிரசங்கம் அமிர்தமாயிருந்தது என ஆனந்தப்பட்டார்கள். அந் தணர்கள் கூடத் தம் இல்லங்களில் கூடி அப்பரின் அழகான சொற்பொழிவை பற்றி அகமகிழ்ந்து பேசிக் கொண்டனர். சிலர், இச்சொற்பொழிவின் திறம் சமண சமய வாசனையாலன்றோ வந்தது! சமணர் களின் கலைத் திறம் எங்கே போகும் ? என்றும் பேசிக் கொண்டனர். இவ்வாறு பிரசங்கத்தை பலரும் பாராட்ட அப்பரும், அவர் தமக்கையாரும் சம்பந்த ருடன் அவர் தம் இல்லத்துக்கு ஏகினர்கள்.

இரவு அறுசுவை யுண்டியருந்தின் பிறகு சம்பந் தரும், அவர் தந்தையாம் விருதயரும் அப்பரை ஒரு தனி யறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சம்பந் தர் அப்பரைப் பார்த்து அன்பரே! உம் பிரசங்கம் மிக

மிக அழகாய் இருந்தது, மக்களை மெய் மறந்துக் கேட்கச் செய்தது. உம்முடைய ஆற்றல் அளவிட முடியாததே ! ஆயினும் சொற்பொழிவில் ஆங்காங்கு, அடிக்கடி சமண சமயக் கொள்கைகள் தலைக்காட்டித் தழைக்கின்றன. அடிக்கடித் திருககுறளையும், நாலடியாரையும் மேற்கோளாகக் கொடுக்கின்றீர்கள் ! சமண சமய நூல்களாகிய அவற்றை நீர் பலருக்கும் அறிமுகப் படுத்தக் கூடாது. அக் கொள்கைகள் பரவுமாயின் நம் சமயம் எவ்வாறு நிலைக்கும்? சமண சமயத்தை அழிக்க வேண்டுமென்று நினைத்தால் வைதீகக் கொள்கைகளையே பரப்பவேண்டும். வேள்வியைப் பற்றியும், பிணத்தின் மேல் நின்று தவம் புரிதலைப்பற்றியும், கள்ளையும், ஊனையும் புசிக்கும் கபாலிகத்தைப் பற்றியும் உயர்த்திப் பேசி அக்கொள்கைகளையே நீர் பிரசங்கத்தில் பன்முறைச் சொல்லிப் பரப்ப வேண்டும். சிறு தெய்வங்களை வழிபடும்படி மக்களை வற்புறுத்த வேண்டும். அவர்களை அத்தெய்வங்களுக்கு உயிர்ப் பலியிடும் படித் தூண்டவேண்டும். இதனுல் சமணர்கள் கூறும் தேவமூடம், பாஷண்டி, மூடம், லோக மூடம் ஆகிய மும்மூடங்களையும் எதிர்த்தவர்களாவோம். மக்களிடையே நமது தெய்வத்தை நிந்திக்கின்ருர்கள். நமது சந்நியாசிகளைப் பாஷாண்டி என்று பழிக்கின்ருர்கள். பலியிடுதல் முதலியவைகளை மூடத்தனம் என்றும் முழங்குகிருர்கள், என்றும் திரித்துக் கூறி மக்களை நம் பக்கலில் சேர்க்கவேண்டும். பொதுவாகச் சிவபக்தி கொள்வதே முக்கிய தருமம் என்றும், சிவபக்தி காரணமாக இழைக்கப்படும் எத்தகையக் குற்றங்களும் குற்றமாகா வெனவும், அப் பக்தியால்

நேரிடும் குற்றங்களைச் சிவபிரான் மன்னித்து மக்களை ஆட்கொள்ளுவாரென்றும் போதிக்க வேண்டும், தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்தாலும் அக்குற்றமிழைத்தவன் சிவபக்தனுயின் அக்குற்றங்கள் சிவபெருமாளுல் மன்னிக்கப்பட்டு அவனும் ஆட்கொள்ளப்படுவான் என்றும், நீர் கொஞ்சமும் தயங்காமல் பேச வேண்டும். என்று வற்புறுத்தியுரைத்தார்.

பிறகு சம்பந்தர் அப்பரைப் பார்த்து இவ்வளவு தான் விஷயம். இவ்வறை உமக்கு உரைக்கத்தான் உம்மைத்தனியாக இவ்வறைக்கு அழைத்து வந்தோம். நான் கூறியவற்றை எல்லாம் மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள் எனப்புன் முறுவலுடன் புகன்றுர், நாளைக்கு ஒரு பிரசங்கம் இருக்கிறது, அச்சொற்பொழிவில் சமண சமயக்கொள்கையாகிய கொல்லாமை, புலால் உண்ணுமை இவைகளைக் கண்டித்துப் பேச வேண்டும். பக்தி மார்க்கமே உயர்ந்த மார்க்கமென்பதை மெய்பிக்க வேண்டுமென்றுர். அப்பரும் அதற்கிசைந்தார்.

## திருநாவுக்கரசர் பிரசங்கம்

இன்றும் திருநாவுக்கரசர் பிரசங்கமென விளம்பரப் படுத்தப்பட்டது. நேற்று அவருடைய சொற்பொழிவிளுல் பரவசமாகிய மக்கள், திரள் திரளாக வந்து கூடிவிட்டனர். பிரசங்க மேடையில் சிவபாத விருதயரும், திருஞானசம்பந்தரும், மற்றும் பல விப்ரர்களும் அமர்ந்திருந்தனர், திருநாவுக்கரசர் பேச்சாளராகையால் அவருக்குமட்டும் அம்மேடையில் இடமளிக்கப்பட்டிருந்

தது. ஏனைய தமிழ் மக்கள் கீழே அமர்ந்திருந்தனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரை அறிமுகப் படுத்திவைக்கையில், அப்பர் சமணம் புகுந்தது முதல் அவரை வயிற்று வலியின் மூலம் சிவபெருமான் சைவ சமயத்திற்குத் திருப்பிய வரையிலும் விரிவாகப் பேசி. இன்று சமண சமயக் கொள்கைளில் மிக முக்கியமானவைகளைக் கண்டித்தும், நமது கபாலிக, வாம மார்க்கங்களின் முக்கியக் கொள்கைகளை விளக்கியும் பேசுவார் என்று கூறிவிட்டு தனது ஆசனத்தில் அமர்ந்தார். உடனே திருநாவுக்கரசர் "அரகர மகாதேவ" என்ற சப்தத்துடன் எழுந்து, தமிழ் மக்களே! நாம் இது வரை சமண சமயக் கொள்கைகளை மேற்கொண்டு ஏமாற்றமடைந்தோம். இதே மேடையில் அமர்ந்திருக்கும் பிராமணோத்தமர்கள் மகா புண்ணியவான்கள்! பிரம்மாவின முகத்தின் வழியாகத் தோன்றியவர்கள். மானிலத் தேவர்கள்! ஆகவே அவர்கள் மக்களில் சிறந்தவர்கள். உயர்குலத்தவர்கள். அதனாலேயே அவர்கள் பிராமணர்களென்று அழைக்கப் படுகின்றார்கள். அவர்கள் ஆங்காங்கு பரப்பி வரும் நான்கு வேதங்கள் ருக். யஜுர், சாம, அதர்வண என்ப வைகளேயாகும். அந் நான்கு மறைகளும் இறைவனால் உரைக்கப்பட்டன. அத்தகைய வேதங்களி கூறப்பட்டிருக்கும் பக்திமார்க்கத்தையும், அதன் அடிப்படையான கொள்கைகளை அனுஷ்டிக்தும் வேதவேள்வி, கபாலிகம். வாமமார்க்கம் முதலிய அரியக் கருத்துக்களை உங்கள் முன்னிலையில் அறைய வந்துள்ளேன். ஊனொழித்துண்ணல், முற்றுந் துறத்தல், காடுகளிலும், மலைகளிலும், திரிதல் முதலாய கொள்கைகளை நாம் அடியோடு மறத்தல் வேண்டும்.

கான நாடு கலந்து திரியிலென்
ஈனமின்றி இருந்தவம் செய்யிலென்?
ஊனையுண்ட லொழிந்துவான் நோக்கிலென்?
ஞானனென்பவர்க் கன்றி நன்கில்லையேல்!

(அப்பர் தேவாரம்)

என்று பாடினார். இதனைக் கேட்ட மக்கள் பலவிதமாகக் காட்சியளித்தனர். மேடைமீதிருந்த விப்ரர்கள் அனைவரும் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். கூட்டத்திலிருந்த சிலருடைய முகங்கள் வெறுப்பைக் காட்டின! சிலர் இருகாதுகளையும் பொத்திக் கொண்டனர். கபாலிகர்களும் மற்றவர்களும் நமச்சிவாயா! அரகர மகாதேவா! வென கோஷம் செய்தனர். திருஞானசம்பந்தர் பெரும்பாலான மக்களின் நோக்கத்தை உணர்ந்து அப்பரையும், அவர் பாடிய பாட்டையும் பாராட்டிப் பேசினார். அப்பரே! இந்த ஒரு தேவாரத்தால் நமது எதிரிகளின் தலைசிறந்த தமிழ்நூலாகியத் திருக்குறளை வீழ்த்தினீர்!

"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு"

"தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு"

"செயிரிற்றலைப் பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற்றலைப் பிரிந்த ஊன்"

என்ற போலிக் கொள்கைகளைப் பின்பற்றி துறவறம் என்ற பெயரால் முற்றுந்துறந்ள், காட்டிலும் மேட்டிலும், அலைந்தும், தவம் என்ற பெயரால் பட்டினிக் கிடந்

தும், ஒழுக்கம் என்ற பெயரால் ஊனுண்ணுமை முதலி யக் கொள்கைகளைக் கடைபிடித்தும் அவலமடை வதைவிட, எம்பெருமானுகிய சிவபெருமானை முழுமன தோடு பக்திகொண்டு, அவர் தம் பொருட்டு எதையும் தியாகம் செய்வதென்கின்ற பக்தி மார்க்கக் கொள்கை களை கடைப்பிடித்தால் எல்லா நலனும் அடையலா மென்பதை நன்கு விளக்கினீர். இதுதான் நமது கொள்கை. கபாலிக சந்நியாசிகளைப் போன்றத் துறவே மேலானது. இதனைப் பரப்புவதே நமது நோக்கமாக விருத்தல் வேண்டும். இங்கு குழுமியுள்ள அன்பர்க ளனைவரும் நமது நான்கு வேதங்களையும், சுருதிகளை யும் பின்பற்ற வேண்டுமென்றும், திருக்குறளை அடிப் படையாகக் கொண்டக் கலைகளை வெறுத்துத தள்ள வேண்டுமென்றும் கூறி முடித்தார், பின்னர் அப்பர்:

ஊனிகந்தா னுரிகையர் குண்டர் பொல்லா வூத்தை
வாய்ச் சமணருறவாக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ளவயிரத்தை நண்ணு நாயேனைப்
பொருளாக ஆண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும் வேந்தனே
விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத்தூணே யென்றென்றே
நானரற்றி ரைகின்றேனே,

(அப்பர் தேவாரம்)

இதனைக் கேட்டுப் பலர் ஆரவாரஞ் செய்தனர். சிலர் கூட்டத்தை விட்டு எழுந்தே போய்விட்டனர். ஆங் காங்கு சிலர் ஏதோ இரகசியமாய் பேசிய வண்ணமிருந் தனர். குழப்பத்தினிடையே ஒருவர் எழுந்து ஊனுண்

ணமையை நீங்கள் கண்டிக்கின்றீர்களா? இதுதானு உங்கள் மதப் பிரசாரம்?

"உண்ணுமை யுள்ள துயர்நிலே யூனுண்ணல்
அண்ணுப்தல் செய்யா தளறு"

என்று தமிழ் மறை சாற்றுகின்றதே! நமது உயிர்நிலே ஊனுண்ணுமையை இயற்கையர்க உடையது என்று கூறும் அவ்வுயரிய அறநூலைப் பழிப்பதுமன்றி, ஊனுண்ணலா மென்ற கருத்துப் பட பிரசாரம் செய்கின்றீர்களே! நாட்டில் தீய ஒழுக்கத்தைப் பரப்புவது தான் உங்கள் நோக்கமா? என்று ஆத்திரமாகக் கேட்டார்.

இதனைக் கேட்டச் சம்பந்தர் எழுந்து நீர் கூறுவது சமண சமயக் கோட்பாடு, நமது வைதீக சமயம் இயற்கையோடு கூடியது. மனைவி மக்களோடு எந்நாளும் வாழ்ந்து எச்செயலையும் நமச்சிவாயா வென செய்வதில் குற்றமில்லை, நாம் ஒன்றை ஒன்று பிடித்துத் தின்னும் உலகத்தில் பிறந்திருக்கின்றோம். இதறகு மாருக, மக்கள் வாழ முடியாது, அதனுற்ருன் நமது சமயம் தெய்வ பக்தியை அடிப்படையாகக் கொண்டெழுந்தது. இதுதான் சைவசிந்தாந்தமுமாகும். நமது சமயத்திற்கு திருநீறும், ருத்திராட்சமும் அடையாளங்கள். இவ்விரணடு மணிந்து சிவபெருமானை தோத்திரம் செய்தால் அதுவே ஆன்மாவை உய்விக்கும்.

ஒழுக்கம் விழுப்பந் தரலாற் ஒழுக்கும்
உயிரினும் ஓம்பப் படும்!

என ஒழுக்கம், ஒழுக்கம் என்று பறை சாற்றும் சமணர்கள் நமது எதிரிகள். வேத காலத்திலிருந்தே அவர்கள் நம் கொள்கைகளை வெறுப்பவர்கள்.

"ஊனொடுண்டல் நன்றெனஊனொடுண்டல் தீதென
ஆனதொண்ட ரன்பினால் பேச நின்ற தன்மையான்"

(சம்பந்தர் தேவாரம்)

கண்ணப்பர், தான் ஆர்வமொடு புசிக்கும் புலாலை எம் பெருமானுக்கு அன்போடு அளித்தார், அதனை சிவ பெருமான் இன்பமாகப் புசித்துக் கண்ணப்பரை ஆட் கொண்டார்! ஆகவே ஊனொடு உண்பது தவறல்ல என் பதை இந்த சம்பவத்திலிருந்து நீர் அறிந்து கொள் ளும். சமணர்கள் நூலாகிய திருக்குறளை மறை யென் றும் அழைக்க ஆரம்பித்து விட்டீரா? அந்நூலில் நமது தேய்வீக யாகத்தையும், தெய்வ நிலையையும், கண்டித்திருப்பதை நீர் அறியவில்லை போலும். இப்படி சமணப் பித்து மக்கள் மண்டையிலே ஏறிவிட்டது! நமது மறைகள் நான்கு என அப்பர் ஆரம்பத்தில் கூறி யதை மறந்து விட்டீரோ! அந் நான்கு வேதங்கள் கூறும் அரிய பொருள்களையே நாம் பின்பற்ற வேண்டுமென்பதை யாரும் மறக்கப்படாது! மறுக்கப் படாது! என்று பேசி அப்பரையும் பாராட்டிவிட்டுக் கூட்டத்தைக் கலைத்துவிட்டார். மக்கள் கலைந்து வீட் டிற்கு சென்றனர். திருஞானசம்பந்தர், சிவபாதவிரு தயர். அப்பர், திலகவதியார் இன்னும் சில பிராமணர் கள் தவிர மற்றவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள். அப்பொழுது சிவபாதவிருதயர், அப்பரைப் புகழ்ந்து பேசி, அப்பரே இன்றைய சொற்பொழிவிலிருந்து உமது வைதிக சைவத்தின் உணர்ச்சியையும், உள் ளன்பையும் கண்டு நான் பெருமகிழ்ச்சி யடைகின்றே னென்று சொன்னார். அப்பரும் புன்னகை பூத்தார்.

அப்பரைப் பார்த்து. நீர் சமணத்தையழிக்க விரும்பினால் அவர்கள் கலைகளையும் அழித்தேயாக வேண்டும். நாம் 'கூறும் தெய்வ நிலையையும், சமணர் கூறும் தெய்வநிலையையும் ஒப்பிட்டுப்பாரும். பொறிவாயில் ஐந்தவித்தான்,அறவாழி அந்தணன்; எண் குணத்தைத்தான் என்றெல்லாம் ' வருணிக்கிறார்கள். திருக்குறளை அடியொடு மறுக்கவேண்டும்; இன்று போலவே நீர் பேசினால்போதும். மக்கள் நமது பக்தி மார்க்கத்தை தழுவ ஆரம்பித்து விடுவார்கள். சமண சமய பேர் உள்ளவைகள் சிலவற்றையும் நாம் அழித்தாலொழிய நம் சமயம் நாட்டில் பரவாது. எங்கெங்கெல்லாம் நாம் ஆதிக்கம் பெறுகிறோமோ ஆங்குள்ள சமண கோயில்களை மாற்றி சிவலிங்கத்தை நிறுவ வேண்டும். தமிழகத்திலுள்ள, அரகந்த நல்லூர். அறந்தாங்கி, அறவோர்ப் பள்ளி, நயினார் குப்பம். அகளங்க நல்லூர், திருப்பறங்குன்றம் இன்னோரன்ன பெயர்களைக்' கொண்டதாகவெ எங்கும் காணப்படுகின்றன. அவைகளின் பெயர்களைக் கூட மாற்ற நேரிடும். உதாரணமாக சோழ நாட்டில் மிகச் சிறப்பு வாய்ந்த உறையூரும், அதற்கடுத்த மலைக்கோட்டையாகிய ஸ்ரீஜினப்பள்ளியும் மிக மிகப் பிரசித்திப் பெற்றவை அம்மலையில் பல சமண முனிவர்கள் தவமியற்றுகிறார்கள். ஆகவே அதனை திருஜினப்பள்ளி என மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது. அதனை நாம் கைப்பற்றிய பின்னர் திருசிராப் பள்ளி என மாற்ற ஓர் இரகசிய ஏற்பாடு செய்து வருகின்றோம். இவ்வாறு நாம் பல வேலைகள் செய்யவேண்டுமென்பதையும். அதற்காக பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதையும் நீர் மறக்கப்படாது. என்று கூறி

ஞர். சம்பந்தரும் சில வார்த்தைகள் பேசிய பின் நான் திருவாரூர் போகின்றேன். நீரும், உமது தமக்கையாரும் காஞ்சி நாடு சென்று நமது கபாலிக மார்க்கத்தை நன்கு பரப்புங்கள் என்று கூறி அவரவர் சென்றனர்.

## அப்பருக்கு எச்சரிக்கை

திருநாவுக்கரசர் சம்பந்தரிடம் விடை பெற்றுக் கொண்டு பல்லவ நாட்டுக்குத் திரும்பினர். தானும், தமக்கையுமாகக் கபாலிக மதப்பிரச்சாரம் செய்ய ஊர் ஊராகப் புறப்பட்டனர். தமிழர் சமயமாக விளங்கும் சமண சமயக் கொள்கைகளுக்கு மாருகவும், தமிழ் நாட்டிலே பிறந்து, தமிழறிவிலே சிறந்து விளங்கும் பேராசிரியர்களின் கலைகளைப் பழித்தும் ஏதோ புதிதாகத் தோன்றி மக்களின் நாகரிகத்தையும் ஒழுக்க மேன்மையும் பாழாக்கும் பக்தி மார்க்கமெனும் கபாலிக வாமமார்க் கத்தைப் பரப்பியும், நாட்டிற்கே கேட்டைவிளைவிக்கும் அப்பரின் அடாத செயலைக் கண்டு தமிழர்கள் ஆததிரங் கொண்டனர். இதனைப் பல்லவ மன்னனிடமும் பகர்ந்தனர். பல்லவ மன்னனும் அப்பரின் செயலுக்கு வருந்தி அவரை அழைத்து வரும்படி இரண்டு சேவகர்களுக்கு கட்டளையிட்டான். அவ்வாறே இரண்டு பேரும் விரைந்தனர். அப்பர் கபாலிக சந்நியாசிகளின் மடத்தில் இருப்பதாகக் கேள்யுற்று அங்கு சென்றனர். அம்மடத்தில் கபாலிக சந்நியாசிகள் நால்வர் தங்கள் மனைவிகளுடன் கள்ளைக்குடித்துவிட் கைகளிலுள்ள மண்டையோடுகளில் புலாலை நிரப்பி கொண்டு அப்பரோடு உரையாடிக் கொண்டிருந்தனர்.

இந்தக் கோரமான சம்பவத்தைக் கண்ட சேவகர்கள் இவர்கள் தாம் தற்போது தமிழகத்தில் ।ருந்து மக்கள் மதியைக் கொடுக்கும் கபாலிகர்கள் என்பதை அறிந்து, இவர்கள் வசமா அப்பர் அகப்பட்டார்! அட பாவமே! அறிவால் நிறைந்த அற ம்ாண்புடையராய், அகிம்சா மூர்த்திகளாய், சகல சுகபோகங்களையும் துறந்து மனத்தூய்மையுடன் அறம் வளர்த்தலையும், கலைவளர்த் தலையுமே கடமையாகக் கொண்டு விளங்கும் நமது தமிழ் மூனிவர்களைப் பிரிந்து சவந்தாங்கும் மயானத்து சாம்பலோடு மயிர்க் கயிரையும், எலும்பு மாலைகளை யும் தரித்துக் கொண்டு கள்ளையும், ஊனையும் உண்டு, கணிகைகளோடு, களித்தாடும் கபாலிக கயவர்களிடம் வெறுப்பும், கோபமும் கொண்டனர். குடியர்கள் கும்ப லில் செல்லுகின்றோம், ।என்பதை அறிந்த சேவகர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டு மெதுவாக பல்லவ மன்னனின் முடங்கல் பத்திரத்தை அப்பரிடம் நீட் டினர். அப்பர் படித்துப் பார்த்தார்! திகைத்தார்! அதனை கபாலிக சந்நியாசிகளிடம் கொடுத்தார்! அவர் களும் படித்தனர். கோபக் குறியும், குடிவெறியும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டன. சீற்றமொடு சேவகர்களை நோக்குகின்றனர்! அவர்களின் ஆதர வைக் கண்ட அப்பர் சேவகர்களைப் பார்த்து, என்னை அரச சமூகத்திற்கு வரும்படி அழைக்கப்பட் டிருக்கி றது. எதற்காக இந்த கட்டளைபிறந்தது எனக்கேட்டார். "எங்களுக்குத் தெரியாது! உடனடியாக அழைத்து வர உத்தரவு! புறப்படுங்கள் போகவேண்டும் என்றார் கள். அப்பர் உடனே சமணப் பயல்களின் சூழ்ச்சியோ என்றார்? சேவகர்களுக்குக் கோபம் பிறந்துவிடடது!

அவர்களில் ஒருவன் பெரியவரே வாயை மூடும்! சமண சந்நியாசிகளுடன் பழகிய நீரா இவ்வாறு பேசுகின்றீர்! அவாகளின் கலைவன்மையையும்' சில மேன்மைகளையும் உலகம் அறியும், இன்று நீர் கூடி யிருக்கும் இந்தக் கபாலிக சந்நியாசிகளின் ஒழுக்கஈனத்தை அறிந்தும் அவர்களுடன நீர் பழகுவதைக் காண என் போன்ருர்க்கே வருத்தமாயிருக்கின்றது! உம்முடைய கோணல் மதியைக் கண்டுயார்தான் வருந்தாமலிருக்க முடியும்! என்ருன்; அதனைக்கேட்ட மற்ரெருசேவகன் வருகின்ருரா? இல்லையா? என்று இரண்டிலொன்றைக் கேள் நாழிகையாகி விட்டது, என்று கடுகடுத்தான். இவனுடைய ஆர்ப்பாட்டத்தை கண்ட கபாலிக சந்நியாசிகள் தங்கள் காதலிகளுடனும், கபாலத்துடனும் ஒவ்வொருவராக எழுந்து உள்ளே மறைந்து விட்டனர்! அப்பர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சேவகர்களுடன் புறப்படுவதைவிட வேறு வழியின்மையைக் கண்டு எழுந்து வந்தார். பிறகு அப்பர் அரசவையில் நிற்கின்ருர்!

## அரச அவை

பல்லவ மன்னன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ருன். பக்கத்தில் அமைச்சர்கள் சூழ. பல தமிழர்களும், தமிழ் முனிவர்களும் வீற்றிருக்கின்றனர். அப்பருக்கு ஒரு ஆசனம் அளிக்கப்பட்டது. மகேந்திர பல்லவன் அப்பரைப் பார்த்து,

"அப்பரே! பாடலிபுரத்தைத் விட்டு வெளியேறி விட்டீராமே?"

"ஆம்"

இப்பொழுது நீர் மேற்கொண்டுள்ள கொள்கை யாது?

"ரிக், யஜுர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களையும் அடிப்படையாகக் கொண்ட வைதிகக் கொள்கை,"

"ஆனால் நீர் பாடலிபுரத்தில் பயின்றவை அனைத்தும் விழலுக்கு இரைத்த நீர்தானா?

"ஏன்?"

"பாடலிபுரத்தில் நீர் பயின்றது தமிழ்நாட்டு அறிவியக்கக் கொள்கை யல்லவா?"

"இதுவும் அறிவியக்கக் கொள்கைதான்."

(மகேந்திரபல்லவன் சிரித்து) பேஷ்! வேதத்தின் பெயரால் வேள்வியில் உயிர்க் கொலை செய்தல் அறிவியக்கமா? நரயாகம், 'பௌண்டரிக யாகம்' போன்ற பல யாகங்கள் அறிவியக்கமா? மண்டை ஓட்டில் கள்ளை நிரப்பிக் கொண்டு தானும் தன் காதலியுமாகக் குடித்துக் கொண்டு நமச்சிவாய மந்திரத்தை ஓதுவது அறிவியக்கமா? சவந்தாங்கும் மயானத்துச் சாம்பல் எலும்பு மயிர்க்கயிறு ஆகியவற்றை அணிந்துகொள்ளுதல் அறிவியக்கமா? ஒழுக்கத்தைவிட கடவுள் பக்தியே சாலச் சிறந்ததெனக் கூறி கடவுள் பெயரால் எத்தகைய தீமைகளையும் செய்யலாம் என்பது அறிவியக்கமா? சிறு தேவதைகள் எனப் பல பெயர் நாட்டி அவைகளுக்கு உயிர்ப்பலி கொடுத்து ஊனைப் புசித்

தல் அறிவியக்கமா? மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து ஒருவருக் கொரு நீதி வழங்குவது அறிவியக்கமா? கடவுளை நம்பினோர் கைவிடப் படார் எனக்கூறி நமது வாழ்வுக்கும் தாழ்வுக்கும் கடவுளே காரணமென்பது அறிவியக்கமா? இவைகளில் எதை அறிவியக்கம் என்கிறீர்?

(அப்பர் மௌனம் சாதித்தல்)

தருமசேனரே! கந்தழி அல்லது வினையின் நீங்கி விளங்கிய அறிவனும், ஆதிபகவன் அருளிய தொல் வேதங்களின் வழியில் நின்று 'யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்ற பரந்த நோக்கத்துடன் மக்களனைவரும் சகோதர உணர்ச்சியுடன் வாழவும், கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கவும், ஒழுக்கம் வளர நற்காட்சி நன் ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளின் அடிப்படையில் திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்களை இயற்றியும் மக்களை மாண்புறச் செய்யும் நமது தமிழகத்துச் சமணச் சான்றோர்களிடம் அறிவும் ஆற்றலும் பெற்ற நீர் நம்மைப் பழிக்கும் அயல் நாட்டு ஆரியர்களுடன் கலந்து உறவாடுகின்றீர்! பெருமையும் பழமையும் சான்ற நமது தமிழர்தம் திருவறத்தைப் பழிக்கின்றீர்! தொல்காப்பியர் போன்ற பேரறிஞர்கள் வழி தோன்றிய அறவோர்களைத் தூற்றுகின்றீர்! உமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் உறைவிடமாயிருந்த குருபீடத்தையே நாக்கில் நரம்பின்றி பேசுகின்றீர்! அறிவு விருந்தளித்த அறவோர்ப் பள்ளியை மதியாது அவமதிக்கின்றீர்! ஆரியர்களின் வேத வேள்வி, மனுதர்மம், காபாலிகம், வாமமார்க்கம்

போன்ற ஆபாசக் கொள்கைகளை அறிவியக்கம் என்று மயங்குகின்றீர்! அவைகளைப் புகழ்ந்து பாடுகின்றீர்! என்னே உமது விபரீதப் போக்கு! நமது தாய் நாடாம் தமிழகத்தை உற்றுப்பாரும்! எத்துணை அறவோர்ப் பள்ளிகள்! எத்துணைக் கவிஞர்கள்! எத்துணைக்கட்டு ரைவல்லார்கள்! எத்துணைச் சிற்பிகள் எத்துணை ஓவி யர்கள்! எத்துணை இசைவாணர்கள்! எத்துனை நிகழ்ச் சிகள்? எங்கும் பல்கலைக் கழகமாய் விளங்கவில்லையா? இத்தகைய சிறந்தத் தமிழகம் உமது போக்கால் வீழ்ச் சியடையும்! நமது உயரியகலைகளும் பண்புகளும் பாழாகும்! எங்கும் மூடநம்பிக்கைகள் ஆட்சி செலுத் தும் நமது மக்கள் மதத்தின் பெயரால் ஆரியர்களுக்கு அடிமையாவார்கள்! இத்துடன் தமிழர் வாழ்வு பல நூற் றுண்டுகளுக்குத் தலைதூக்காது! ஆகவே அப்பரே நன் ருக சிந்தித்துப்பாரும்! பழிக்கு ஆளாகாதீர்!

சிந்திப்பது ஒன்றுமில்லை! என்னை சிவபெருமான் ஆட்கொண்டார்! அவன் ஆணை வழி பணியாற்றுகின் றேன். அவனன்றி ஒரணுவும் அசையாதன்றோ?

(மகேந்திரபல்லவன் சிரித்து)

அப்பரே! உமது கடவுள் தத்துவம் நன்ருயிருக் கிறது! உமது சிவபெருமான் ஒரு கூட்டத்தாருக்குத் தான் தலைவர் போலும்! சரி அவரைப் போல் உம்மைப் பலாத்காரம் செய்து மனமாற்றம் செய்யும் கேவலச் செயலை நான் செய்யமாட்டேன்! உமது கபாலிகம் முதலிய கொள்கைகளை நீர் தாராளமாகப் பிரசாரம் செய்துக் கொள்ளும்! ஆனல் அதே நேரத்தில் தமிழர் தம் பண்டைய கொள்கையாகிய அறநெறியைப் பழித்

தால் உம்மை நாடு கடத்த நேரிடும். என்று எச்சரிக்கை செய்கிறேன். சென்று வாரும். உடனே அப்பர் வெளி யேறி நேரே தமக்கையாரிடம் சென்று நடந்ததைக் கூறி வருத்தமுற்ருர், இனி சோழ நாடு செல்வதே நலமென இருவரும் முடிவு செய்து கொண்டனர்.

## அப்பரும், அவர் தமக்கையாரும் நாட்டை விட்டோடுதல்

அப்பர் கபாலிக சந்நியாசிகளின் மடத்திற்குச் சென்று அரசனுடைய கடுமையானஎச்சரிக்கையையும், அதனுல் இந்நாட்டில் பிரசாரம் செயயவியலாது என்ப தையும் விளக்கிக் கூறி, தான் சோழ நாட்டிற்குச் சென்று சம்பந்தரோடு பிரசாரம் செய்யப் போவதாக வும் தெரிவித்தார். அந்தத் தலைமைக் கபாலிக சந்நியாசி மண்டையோட்டில் நிறைத்துள்ள கள்ளை நமச்சிவாயா! நமச்சிவாயா! வெனக் குடித்துக் கொண்டே அப்பரே அப்படியே செய்யும்! நமச்சிவாயா! நீ பயப்படாதே! நான் அந்தப் பல்லவனைப் பார்த்துக்கொள்ளுகின் றேன். நேற்று நடந்த 'மத்த விலாசப் பிரஹஸனம்' என்ற நாடகத்தைப் பார்த்தீரா? நம்மையும், நமது கபாலிகக் கொள்கைகளையும் கேலி செய்கின்ற நாட கம் இருக்கட்டும், நான் அந்தப் பல்லவன் சிரசின் ஓட் டில் இதே நமச்சிவாயனை ஊற்றிக் குடிக்காவிடில் நான் கபாலிக சந்நியாசி அல்ல! நமச்சிவாயா! நமது நமஸ் காரத்தை திருவாரூர் காபாலீஸ்வரனுக்கும், நமது தலை வர் சம்பந்தருக்கும் அறிவியும். அந்த ஊரையும் நமது கபாலிக சமயக் கூட்டத்தாரையும் பற்றி ஒரு அழகிய பாட்டு பாடுமே! இந்த நமச்சிவாயன் கேட்கட்டும்.

அருமணித்தடம் பூண் முலையரம்பையரோட
ருளிப்பாடியர்
உரிமையிற் றொழுவார் ருருத்திரபல்கணத்தார்.
விரிசடை விரதிக ளந்தணர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும் திருவாரூ ரம்மானே.
—அப்பர் தேவாரம்.

வெகு பேஷ்! அடி சகீ! பாட்டு எப்படி! நம்மைப் பற்றி நமச்சிவாயன் நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறான். ஐயாவுக்கு நாவரண்டிருக்கும்! கொஞ்சம் கபாலத்திலுள்ள நமச்சிவாயனைக் கொடு! தாக சாந்தி செய்து கொள்ளட்டும்! அப்பர் திடுக்கிட்டு முகம் சுருங்கிய வண்ணம், சுவாமி! நான் இன்னும் அந்த விரதம் எடுத்துக் கொள்ளவில்லையே! என்றார்! ஓ மறந்து விட்டேன்! உணவு கொள்ளும்! இன்று நமது மடத்தில். நல்ல ஊன் உணவு சமைக்கப்பட்டிருக்கிறது. நமது சகியின் சமையற்பாகம் மிக ருசியாக இருக்கும்! உட்காரும்! என்றார். அப்பர் மெதுவாக நான்........... ......என்று இழுத்தார். என்ன சந்தேகம்! விழிக்கின்றீரே! ஊனும் உண்பதில்லையோ! அப்படியானால் உம்மை சமணம் விடவில்லையென்றுதான் அருத்தம்! அப்பரே நீர் சிவபெருமானின் கையிலுள்ள கபாலத்தை வருணித்துப் பாடியதை மறந்து விட்டீரோ?

"ஊனுலாம் வெண்டலை கொண்டூர்ப்பலி
திரிவான்"
"பாரேறு படுதலையில் பலிகொள்ளும் பரம்பரனை".
"ஊனுற்ற வெண்தலை சேர்கையர்"
"ஊனேறு படுதலையிலுண்டியின் காண்"
"ஊனையாற் தலையிற்பலி கொள்ளும்"

எனப் பல பிரசங்கங்களில் மொழிந்தீர். "ஊனையுண்டலொழிந்துவான் நோக்கி,லென்" என சமண சமயத்தின் ஒழுக்க மேன்மையைக் கேலி செய்தீர் ! இன்று இவ்வாறு பேசுவதன் நோக்கம்தான் என்னே! நல்ல வேடிக்கை ! அடி சகி ! (கபாலத்தைக் காட்டி) ஊத்து நமச்சிவாயனை ! என்று குடிக்க ஆரம்பித்தார். இதனைக் கண்ட அப்பர் இனி தப்பவழியில்லை. யென்றறிந்து சுவாமி ! நான் தங்களைப் போன்ற மெய்யடியார்களின் விரதங்களை ஏற்கவே எண்ணியுள்ளேன். ஆனால் சமண சமயக் கொள்கைகளில் இரண்டறக் கலந்துவாழும் தமிழ் மக்களை நமது கபாலிகக் கொள்கைக்கு அவ்வளவு சீக்கிரத்தில் இழுக்க முடியாது. மேலும் உபதேசம் செய்கின்ற என்னைப் போன்றவர்கள் நமது மகா விரதங்களை எடுத்துக் கொண்டால் எங்களை மதிக்க மாட்டார்கள். ஆகவே நான் ஒரு வேடதாரி, அவர்களை ஏமாற்றி நமது கொள்கைகளை கொஞ்சம் கொஞ்சமாக நுழைத்து சமணத்தை ஒழிக்க முயன்று வருகின்றேன். வேறு விதமாக தாங்கள் என்னை நினைக்கப் கூடாது என்றார், இதனைக் கேட்ட கபாலிக சந்நியாசி, அப்பரே ! உண்மைதான்! நல்ல சூழ்ச்சி ! சரி தாங்கள் போய் வாரும் நாங்கள் பல்லவ நாட்டைப் பக்குவப் படுத்த முயலுகின்றோம் ! இல்லையேல், இரத்த ஆறு ஓடச்செய்து சமணத்தை அழிக்கின்றோம் ! சென்று வாரும் சீக்கிரம். நமது விரதத்தையும் எடுத்துக் கொள்ளும் என்று குடிக்க ஆரம்பித்தார். அப்பர் இதுதான் சமயமென்று வெளியேறி நேரே வீட்டிற்கு வந்து தனது தங்கையுடன் இரவு நடுநிசியில் நாட்டைவிட்டு ஓடிவிட்டார்.

## குலச்சிறையார் சந்திப்பு

தென்னவனின் முதலமைச்சர் குலச்சிறையார் ஓர் நாள் திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் வணங்கி நின்றார், அங்குள்ள பிராமணர்கள் குலச்சிறையாரை இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள் குலச்சிறையார் தனக்குரிய இடத்தில் அமர்ந்து பின் வருமாறு கூறினார்:—

அடியேன் பெரும் பாக்கியசாலி, உங்கள் இருவரையும் ஒருங்கே காணும் பேற்றைப் பெற்றேன்! நீங்கள் இருவருமே எங்கள் செல்வங்கள். பாண்டிய மாதேவி மங்கையர்க்கரசியார் உங்களைக் காணவும், தரிசிக்கவும் இரவு பகலாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றார். சமணர்கள் இந்த நாட்டிலும், எங்கள் நாட்டிலும் வைதீக சமயத்தைத் தலையெடுக்க வொட்டாமல் செய்துவிட்டனர்! கபாலிகமும், வாமமார்க்கமும் எங்கள் நாட்டெல்லையைத் தீண்டக்கூட முடியாது. சுவாமிகளே! இத்தொல்லை இப்போது மட்டுமல்ல மதுரையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னரே *வச்சிரநந்தி என்ற சமண முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட திராவிடசங்கத்தையும் தாங்கள் அழித்தே தீர வேண்டும்; அதன் கிளை சங்கங்கள் இத்தமிழ்நாட்டு பட்டித் தொட்டி முதல் பட்டணம் வரைப் பரவியிருப்பதாகத்தெரிகின்றது. அச்சங்கங்களின் வாயிலாக பகுத்தறிவுக் கொள்கைகளைக் கொண்ட அற நூல்கள் ஏராளமாக இயற்றப்பட்டன. அக்கலைகள் யாவும்

---

* Journal of the Bihar and Orissa Research Society, (J. B. O. R. S. XVII 1—P. 74.)

நமது வேள்வியையும், வேதக் கொள்கைகளையும், பக்திமார்க்கத்தையும், ஒப்புக்கொள்ளாதவை. ஆகையால் அச்சங்கத்தையும், அதன் கலைகளையும் அழித்தால் தான் பூரண வெற்றியடைய முடியும்.

பாவம் நமது பிராமணோத்தமர்கள் தங்கள் தங்கள் மத சம்பிரதாயப்படி வேதவேள்விகளைச் செய்ய முடியவில்லை. ஏதோ வைதீக சமயத்தின் நற்காலத்தால் நீங்களிருவரும் அவதரித்துள்ளீர்கள். உங்கள் தீவிரமான சேவைகளைக் கேட்டு அகமகிழ்ந்தோம். இந்நாட்டைவிட எங்கள் பாண்டிய நாட்டில் உங்களுக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கும். அரசியாரும், நானும எவ்வாறேனும் வேதவேள்வியைப் பழிக்கும் தமிழர் சமயத்தை ஒழித்து ஆரியக் கொள்கைகளாகிய வைதீக சமயத்தை நிலை நாட்டுவதென உறுதிக் கொண்டுள்ளோம். நமது அரசியாரே ஒரு யாகம் செய்து சுவர்க்க இன்பத்தைப் பெற அவாக்கொண்டுள்ளார்கள். வேதவேள்வியில் முழு நம்பிக்கைக் கொண்டவர் நமது அரசியார் ஒருவரே! பாண்டிய நாட்டு விஜயத்தைப் பற்றிய மகிழ்ச்சிக்குரிய தங்கள் பதிலை ஆவலோடெதிர்ப்பார்க்கின்றோம். என்றார். அப்பர் புன்னகைப் பூத்து பேசுவதற்கு வாயெடுத்தார், சம்பந்தர், அவரை அடக்கிவிட்டு குலச்சிறையாரே! உம்மைப்பற்றியும், அம்மையாரைப்பற்றியும் நாஙகளும் கேள்விப்பட்டோம். எங்கள் உள்ளமும் உயிரும் உங்கள் இருவர் பாலே சென்றுள்ளது. பாண்டிய நாட்டில்தான் நமக்கு பூரண வெற்றிகிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்குண்டு. நீங்கள் இருவரும் இருக்கும்போது எங்களுக்கென்ன குறை என்றார், சம்பந்தரும் தவறாமல் ஒருவாரத்தில் வருகின்றோ

மௌனுர். உடனே குலச்சிறையார், தள்ளாத வயதில் அப்பரையும் தொந்தரை செய்கின்றேன் என்ருர். அப்பர் புன்னகையோடு "சமய சேவைக்கு வயது ஏது? இறக்கும் தருவாயில் கூட சேவைக்கு ஏதாகிலும் அவசியம் ஏற்பட்டால் செய்தே தீருவேன் என்ருர். குலச்சிறையார் இருவரையும் வணங்கிவிட்டு விடைப்பெற்றுக் கொண்டார், குலச்சிறையாரும் தக்க பாதுகாப்புடன் சென்ருர்.

## சம்பந்தரின் மதுரை விஜயம்

குலச்சிறையார் சென்ற பின்னர் சம்பந்தர் தனது தந்தையுடனும், மற்றும் சிலபிராமணர்களுடனும் மதுரை விஜயத்தைப் பற்றிக் கலந்தார். அவர்கள் அனைவரும் அப்பரை மதுரைக்கு அழைத்துக் கொண்டுபோக வேண்டாமென்றும், அவரை சோழ நாட்டிலேயேபிரசாரம்செய்யும்படி ஏற்பாடு செய்துவிடவேண்டுமென்றும் முடிவு செய்தார்கள். சம்பந்தர் தலையை அசைத்துக் கொண்டு உங்கள் "கருத்துப்படியேதான் நானும் எண்ணியிருந்தேன். குலச்சிறையாரிடம் அப்பர் பேச முயன்றதைக் கூட நான் தடுத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம் என்ருர். ஆமாம் அப்பொழுதே நாங்கள் அறிந்து கொண்டோம் என்று சொன்ஞர்கள். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அப்பர் வந்தார். சம்பந்தர் அப்பரை வரவேற்று பின் வருமாறு கூறினுர். இந்தத் தள்ளாத வயதில் தாங்கள் மதுரைக்கு வருவது சிரமமாகவிருக்கும், மேலும் ஏதாகிலும் கலகம் நேர்ந்தால் தங்களால் தப்பித்துக் கொண்டு ஓட இயலாது. ஆகவே தாங்கள் சோழ நாட்டிலேயே நமது சமயத்

தைப் பரப்பிக் கொண்டிருங்கள, நான் அங்கு சென்று நிலைமையை அறிந்த பின்னர் தங்களை வர வழைத்துக் கொள்ளுகிறேன் என்றார். அப்பர் இவர்களின் சூதினை யறியாராகையால் இங்கேயே விருக்க சம்மதித்தார். பிறகு சில பிராமணர் புடை சூழ சம்பந்தர் மதுரைப் போய்ச் சேர்ந்தார், குலச்சிறையாரின் முன்னேற்பாட்டின்படி சம்பந்தர் வரவை இரகசியமாய் வைத்துக் கொண்டார்கள். அவருக்கென அமைத்திருந்த மடத்தில் போய்ச் சேர்ந்தார்கள். குலச்சிறையாரும், சம்பந்தரை தரிசித்தார். அப்பர் வரவில்லையோ! வென இரகசிய குரலில் கேட்டார். அவர் சோழ நாட்டில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபடியால் அவரை அங்கேயே பிரசாரம் செய்ய முடிவு செய்தோம் என்றார். குலச்சிறையின் முகம் வாடிற்று. அவர் மகிழ்ச்சியில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டதுபோல் இருந்தது. பிறகு சம்பந்தரிடம் விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

## மங்கையர்க்கரசியும், குலச்சிறையும்

குலச்சிறையார் செய்திருந்த இரகசிய ஏற்பாட்டின்படி அரசனுக்குத் தெரியாமல் மங்கையர்க்கரசி அரண்மனையைவிட்டு வெளியேறி சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்திற்கு வந்து சேர்ந்தார். குலச்சிறையாரும் அவ்வம்மையாரைத் தொடர்ந்து வந்தார். இருவரும் சம்பந்தரை வணங்கி நின்றார்கள். சம்பந்தரும் சிவபாத விருதயரும் மங்கையர்க்கரசியை ஆசீர்வதித்து அமரச் செய்தனர். மங்கையர்க்கரசி சம்பந்தர் வரவை தனது பாக்கியமாகக் கருதி முகமன் கூறினாள். சம்பந்தரும் மங்யைர்க்கரசியை பல படப் புகழ்ந்தார். மங்

கையர்க்கரசி சமண சமயத்தை அழிக்கத் தாங்கள் ஒரு வரே தகுதியுடையரென்றும, அதற்கெனவே கபாலீஸ் வரர் தங்களுக்கு முத்துப் பல்லக்கும், தாளமும் அளித் துள்ளார் என்றும் வாழ்த்தி தாங்கள் அது சம்பந்த மாக இடும் கட்டளைகளை அடியாள் நிறைவேற்றக் கட மைப் பட்டிருக்கின்றேன் என கூறி நின்றுள். சம்பந் தர், அரசியே! மிக்க மகிழ்ச்சி! சமணர்கள் சாவாயும் வாது செய்பாவிகள்! தர்க்கச் சமணர்களை வெல்லு வது அரிது! சூழ்ச்சியின் மூலம்தான் இவர்களை வீழ்த் தமுடியும். எனவே நான் ஒரு மருந்தைக் கொடுக்கின் றேன். அம்மருந்தினை குலச்சிறையார் குறிப்பிடும் நாளி லிருந்து தினம் ஏதாகிலும் ஒரு உணவில் கலந்து அரச னுக்குக் கொடுத்துக்கொண்டே யிருக்கவேண்டும். அர சனுக்குநோயுண்டாகும், அந்நோய் தீர சமணர்கள் எத் தகையமருந்துகொடுத்தாலும் அவ்வப்போது நங்களும் இம்மருந்தைக் கொடுத்துக்கொண்டே வரவேண்டும். அவ்வாறு செய்தால் அந்நோய் சற்றுந் தீராது. இல்லை யேல் நோய் நின்று விடுவது நிச்சயம்! இதனுல் நினது அரசருடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் வராது. பிறகு என் வரவினை மந்திரியாரும், நீங்களும் அரசனுக்கு தெரிவியுங்கள், அரசனும் என்னை ஆவலோடு அழைப் பார், அதன் பின்னர் நான் விபூதியில் காய்ச்சல் நிற்கும் மருந்தைக் கலந்து மந்திரித்துக்கொடுத்து விடுகிறேன். விபூதியைக் கறைத்து பாலோடு கொடுத்தாயானல் ஒரே நாளில் நோய் நின்று விடும். அதன் பிறகு எனது திறமையினுல் அரசனை வசிய மாக்கிக் கொள்ளுகிறேன் என்று கூறினுர்: இந்நய வஞ்சக செயலுக்கு மங்கையர் க்கரசியும் உடன்பட்டாள். பிறகு எல்லோரும் விடை பெற்றுச் சென்றனர்!

## சம்பந்தர் மடத்தில் தீ!

இரண்டு நாள் சென்று சம்பந்தர் மதுரை மாநக ரம் வந்திருப்பதாக பகிரங்கப் படுத்தினர்கள். சொற் பொழிவுகள் பல சொரிந்தன. சம்பந்தர் வேள்விகளில் கொலை செய்வதாலுண்டாகும் சுவர்க்க இன்பத்தையும், தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடாததனலுண்டாகும் மகத்தான தோஷத்தையும் எடுத்து விளக்கிப் பேசி னர். அங்கே இருந்த சமணர்கள் அப் பிரசங்கத்தை எதிர்த்து வாதம் புரிந்தார்கள். இதனல் வாக்குவாதம் அதிகமாகிவிட்டது. சம்பந்தர், சமணர்களை, குண்டர், மிண்டர், கொடும்பாவிகள் என்றெல்லாம் வசைபாட ஆரம்பித்தார். கபாலிக வெறியர்கள் சிலர் ஆர்ப்பாட் டம் செய்தனர். குலச்சிறையாரின் ஆட்களும் சமணர் களைத் தாக்க வாரம்பித்தனர். சமணர்கள் இவர்கள் போக்கை யறிந்து சாந்தமாகவே தங்கள் இருப்பிடம் திரும்பினர். அன்றிரவு சம்பந்தர் முதலானவர்கள் சதி யாலோசனையில் இறங்கினர்கள். தங்கள் மடத்தில் தாங்களே கொள்ளிவைத்துவிடுவதென்று தீர்மானித்து அங்குள்ள சமணர்களை அப்புறப்படுத்திவிட்டு இன்று அரசனுக்கு மருந்து கொடுத்துவிட வேண்டுமென மங் கையர்க்கரசிக்கு செய்தி அனுப்பிவிட்டு இரவு பன்னி ரெண்டு மணிக்குள் தாங்களே தங்கள் மடத்தில் கொள்ளி வைத்துக்கொண்டார்கள். அதே சமயத்தில் மங்கையர்க்கரசியும் அரசனுக்கு மருந்து கொடுத்து விட்டாள்.

மடம் தீப்பற்றி எரிந்தது. சமணர்கள் தீ வைத்து விட்டார்கள் என்று கபாலிக சைவர்கள் கூச்சலிட்டார்

கள். இந்தத் தீயானது அரசனைப் பற்ற வேண்டு மென்று சம்பந்தர் வெளிப்படையாகச் சாபமிட்டார். பொழுது புலர்ந்ததும், அரசனுக்கு அடக்கமுடியாத கடுங்காய்ச்சல் (ஜுரம்) கண்டது. மடமெரிந்ததைப் பற்றியே மதுரை மாநகர மெங்கும் பேச்சு. சமணர்கள் மடத்தில் தீ வைத்துவிட்டார்களென்றும், சம்பந்தர் சிவபெருமானை வேண்டி பாண்டியனுக்கு அத்தீ சுடும் படி சாபமிட்டாரென்றும், அரசனும் அவ்வாறே அதிக காய்ச்சலினால் பீடித்துத் 'துன்புறுகிருரென்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசனுக்கு சமண வைத்தியர் கள் ஏதேதோ மருந்துகள் கொடுத்தனர் 'ஒன்றும் முடியவில்லை. சமணர்கள் நோய் தீர மருந்தளித்தால் அரசியார் நோயுண்டாக மருந்து கொடுத்துக் கொண்டே வந்தார், ஆகவே நோய் நீங்கவேயில்லை. கடைசியாக மங்கையர்க்கரசி சம்பந்தர் வரவையும அவர் மடத்தில் சமணர்கள் தீ வைத்ததையும் அத் தீயை சம்பந்தர் அரசனிடம் புகும்படி சபித்ததையும் அதன் காரணமாகவே நோயுற்றிருப்பதாகவும் கூறி ணள். மந்திரியும் தாளம் போட்டார். உடனே அரசன் ஐந்து நாளாக எத்தகைய மருந்தினுலும். தனக்கு நோய் நீங்காததால் சம்பந்தரின் சீற்றந்தானே வென்று மதிமயங்கி சம்பந்தரை வரவழைக்க உத்தர விட்டான்.

## சம்பந்தரும் பாண்டியன் ஜுரமும்

உடனே சம்பந்தரும் அரசனிடம் வந்து சிவபெரு மானைப் பன்முறை வணங்கி, சிவமந்திரம் ஓதி திருநீறு கொடுத்துவிட்டு அரச மாளிகையிலேயே தங்கி யிருந்

தார். இரவு ஜுரம் சற்று குணமா யிருந்தது; மறுபடியும் காலையில் செய்தது போலவே மாலையில் செய்ததும் நோய் பறந்துவிட்டது, உனது கடவுளே உண்மைக் கடவுள்; உனது மந்திரமே உயர்ந்த மந்திரம்! என்று போற்றிப் புகழ்ந்து சம்பந்தர் திருவடிகளில் மறமே உருவாகியத் தமிழ்மன்னன் மண்டியிட்டான்!

உடனே சமண சாதுக்கள் அரசனைப் பார்த்து அரசரே! சற்று நிதானியுங்கள். 'நமது மதுரைமா நகரிலே ஒருவாரமாக இந்தக் கிளர்ச்சி நடந்து வருகிறது: மடம் தீப்பற்றியெரிந்ததும், தங்களுக்கு ஜுரம் கண்டதும் இந்தக் கிளர்ச்சிக்காரர்களின் முன்னேற்பாடே யாகும்? நமது மந்திரியாரும், அரசியாரும் இக்கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். தெய்வத்திற்கும். இந்நிகழ்ச்சிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. தெய்வத் திருவருள் என்று இவர்கள் பேசுவதெல்லாம் வீண்புரளி. தெய்வத் தினைத்தவறாகப் பிரசாரம் செய்கின்றார்கள். தெய்வத்திற்கு மதமோ கட்சியோ கிடையாது! விருப்பு, வெறுபபு அற்றவர். தாங்கள் "வேண்டுதல் வேண்டாமையி லானடி, என்ற குறளைப் படித்திருக்கின்றீர்கள். எனவே இவர்கள் கூற்றுப்படி ஒரு வகுப்பாரைக் காப்பாற்றி மற்றொரு வகுப்பாரை அழிப்பதற்கு உடன்படும் வகுப்புவாத தெய்வமென்பதே இல்லை. அது தமிழ் மக்களை ஏமாற்ற உபயோகிக்கும் ஓர் கற்பனைக் கூற்று. அதை நம்புவது அறிவுடைமையாகாது! மூடநம்பிக்கை! அதனை நாம் தேவமூடம் என்று அழைத்துள்ளோம். ஆகவே சம்பந்தர் வீசும் வைதீக வலையில் விழாதீர்கள். மத சம்

O-,3N1K2,T
N52

பந்தமென்பது அவர்கள் கருத்தாயின் எம்மோடு வாது செய்ய அனுமதியுங்கள். அதன் மூலம் அவர்கள் கொள்கையை நிலைநாட்டட்டும். அறிவுத் துறையிலே ஆராய்ந்து உண்மையை அறியுங்கள். இதுதான் எங்கள் வேண்டுகோள் என்றனர்,

இதனை செவியேற்ற சம்பந்தரும், குலச்சிறையாரும் மனம் வெதும்பினர். முனிவர்களை நோக்கித் தலையை அசைத்துக் கடிந்தனர். இந்த சமயத்தில் அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சம்பந்தரைப் பார்த்துத் தங்கள் கருத்து யாதோ என்ருன் பாண்டிய மன்னன். சம்பந்தர் கோபக் குறியுடன் பல வசைமொழிகளை அள்ளி வீசிக்கொண்டு வாதத்திற்கு தயார் என்றும், எல்லாம் வல்ல இறைவன் எனது வேண்டுகோளுக்கிணங்கி இந்தப் பாவிகளை அழிப்பதை உங்கள் கண்களாலேயே கண்டு மகிழப் போகின்றீர்கள்! தங்களுக்கு ஏற்பட்டத் தீராத நோயைத் தீர்த்தவர் சவந் தாங்கு மயானத்துச் சாம்பல் பூசிய எம்பெருமானே யாவர்! "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்பும் சிறப்பர் வாழ்தில்லையானின் திருவருளேயாகும்" இதனைத் தாங்களே அனுபவத்தில் கண்டீர்கள். ஆகவே தெய்வநிந்தனை செய்யும் இவர்களை அழிக்கும்படி நமது சிவபெருமானை வேண்டிக்கொண்டு வாதப்போரை நிகழ்த்துவோம்.

"வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே.

வைதிகத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் கராமண் தேரரை
எய்து வாது செய்யத் திருவுள்ளமே.

மறைவழக்க மிலாத மாபாவிகள்
பறிதலைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திருவு ள்ளமே.

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாது செயத்திரு வுள்ளமே.

வேட்டு வேள்விசையும் பொருளை விளி
மூட்டு சிந்தை முரட்டமண் குண்டரை
ஓட்டிவாது செயத்திரு வுள்ளமே

வேட்டு வேள்வி செய்யா அமண் கையரை
ஓட்டிவாது செயத்திரு வுள்ளமே.

பொய்த்தவன் தவ வேடத்தராஞ் சமண்
சித்தரை யழிக்கத் திருவுள்ளமே.

பெண்ணகத்தெழிற் சாக்கியப் பேயமண்
டெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே.

ஓதி யோத்தறியா அமண் ஆதரை
வாதில் வென்ற ழிக்கத் திருவுள்ளமே.''

— சம்மந்தர் தேவாரம்.

என்ற பாக்கள் மூலம் சமணர்கள் பேரில் குற்றஞ் சாட்டினர். அவர்களை வாதில் வெல்லவும் அவர்களை

அடியோடு அழித்துப் போடவும் துணை புரியும்படி தனது இறைவனை வேண்டி நின்றார். சம்பந்தரின் அடாத வார்த்தைகளைக் கேட்டு சமண முனிவர்கள் சிறிதும் கோபங் கொள்ளாது புன்னகையுடன் அரசே! சம்பந்தரின் குற்றச் சாட்டுகளைக் கவனித்தீர்களா? வேதவேள்வியை நிந்திப்பவராம்! வைதீகத்தின் வழி யொழுகாதவராம். அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யாதவராம்! அதற்காக நம்மை அழிக்க வேண்டுமாம். தாங்கள் இங்குதான் நன்கு கவனிக்க வேண்டும், இது வரை நடந்த மந்திர தந்திரங்கள் தெய் வத்தின் சக்தியல்ல வென்பதையும், வேத விரோதிக ளாகிய தமிழர்களை அழிப்பதற்கெனவே இத்தகைய சூழ்ச்சிகள் நமது நாட்டில் செய்யப்பட்டு வருகின்றன வென்பதையும் தாங்கள் எளிதில் தெரிந்துக் கொள்ள லாம். நாங்கள் மடத்தில் தீ வைத்தோ மென்று கூறும் குற்றமும் இந்த சூழ்ச்சியின் அடிப்படையேயாகும்! இதுவரை சம்பந்தர் சாட்டிய குற்றங்களில் நாங்கள் அவருடைய மடத்தில் தீ வைத்தோமென்ற செய்தியை கூறி யிருக்கின்றாரா பாருங்கள். அவர்களே செய்துக் கொண்ட ஆபாசச் செய்தியை அரச சமூகத்தில் சொல்ல சம்பந்தர் நாணுகின்றார். அவர்தம் நோக் கத்தை வெளிப் படையாக கூறிவருகின்றார். வேத விரோதிகளாகிய நம்மை அழித்து அவர் தங்கள் சமூக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவே முயற்சிக்கின் றார் ! என்பதை அவர் பேசும் வசை மொழிகளாலேயே அறிந்துக் கொள்ளலாம். அன்று கனக விஜயர் என்ற வட நாட்டு மன்னர்கள் தமிழர்களாகிய நம்மை பழிதத் மைக்காக நமது தமிழ் நாட்டுச் சிங்கமாகிய சேரன்

செங்குட்டுவன் அம்மன்னர்கள் பேரில் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று தமிழரின் வீரக்கொடியை நாட்டினன். இன்று அக்கூட்டத்தார் தமிழகத்திலேயே புகுந்துக் கொண்டு தமிழர்களையே பழித்து வருகின்றது ! கேட்பாரில்லை ! ஓர் மதிப்பு வாய்ந்த அம்மையாரும், பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சரும் அவர்களுக்கு துணைபோகின்றனர். என்னே காலத்தின் கோலம் ! மன்னவா ! தாங்களும் மதிமயங்கி நிற்கின்றீர் என்பதை நாங்களறிவோம் ! எங்களுடன் வாதம் செய்யவேண்டுமென எல்லாம் வல்ல திருவுள்ளத்தை வேண்டுகின்றூர் ! நாங்களும் அதனை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம் ! அறிவின் திறமையாலும், ஆராய்ச்சி நுட்பத்தாலும் வாது செய்ய யார்தான் மறுப்பார். ஆகவே தாங்கள் 'வாது செய்ய' அனுமதி தாருங்கள் ! வென்றவர் திறமைக்கு ஆசி கூறும் ! என்று புகன்று ஆசனத்தில் அமர்ந்தனர்.

உடனே குலச்சிறையார் கோபமாக எழுந்திருந்து அரசர்க்கரசே தெய்வ நிந்தனை செய்யுமிவர்கள் எதைத் தான் செய்யமாட்டார்கள். வாது செய்ய அறிவும் ஆராய்ச்சியும் எதற்காக ? அவரவர்கள் சமயக்கருத்துக்களை ஏட்டில் எழுதி ஆற்றிலும், நெருப்பிலும் போட வேண்டும். அவ்வேடுகள் நீரோட்டத்தை எதிர்க்க வேண்டும், நெருப்பில் எரியாமலிருக்க வேண்டும். எவர் ஏடு இந்த போட்டியில் வெற்றி பெறுகிறதோ அந்த சமயத்தை தாங்களும், தங்கள் குடிமக்களும் கடைபிடிக்கவேண்டும் என்றூர். இதனைக்கேட்ட சமண சாதுக்கள் நகைத்தனர் ! வாது செய்ய வேண்டுமென்பது ஜாலவித்தையல்ல ! அந்த அற்புதங்களை கழைக்

கூத்தாடிகளும் செய்வர். வாதமென்பது ஒரு பொருளைப் பற்றிய உண்மையைப் பலவாருக ஆராய்வது! தர்க்கத்தின் மூலம் அதன் உண்மைத் தன்மையை நிலைநாட்டுவது. அத்தகைய தர்க்கம் செய்ய நிறைந்த அறிவும், அகண்ட ஆராய்ச்சியும், அனுபவமும் வேண்டும். உண்மையில் வாது செய்ய விரும்பினுல் சமய சம்பந்தமான ஆப்த ஆகம மெய்ப்பொருள்களைப் பற்றி வாதிக்க வேண்டும். இல்லையேல் இந்தக் கழைக் கூத்தாடிகளின் கண்கட்டு வித்தைகளுக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம். இதனுல் இவ்வித்தைகள் எங்களுக்கு தெரியாதென்பதல்ல; சம்பந்தரைவிட ஆயிரமடங்கு அதிகமாகச் செய்யும் ஆற்றல் எங்களுக்கு உண்டு. இச்செயல் அறிவாளிகளின் செயலல்ல! பாமர மக்களை ஏய்ப்பது! தெய்வ சம்பந்தமானதன்று! எனவே அரசர் பெருமான் அவரவர்கள் அறிவை ஆராய உண்மையான வாதப் போருக்கு அனுமதிக்க வேண்டும் என்றனர். அரசர் குலச்சிறையை நோக்கினுர். இலச்சிறை சம்பந்தர் பக்கம் கண்ணைச் சாய்த்தார். உடனே சம்பந்தர் இவர்கள் கூறும் தர்க்க நெறியில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. தெய்வ சக்தியை ஜாலவித்தை யென்று கேலி செய்யும் இந்த பாவிகளை ஏடுவிடும் போட்டியில்தான் தோற்கடிக்கவேண்டும், அதன மூலம் கடவுள் திருவருளை இவ்வுலகம் அறியச் செய்யவேண்டும். ஆகவே அரசன் கட்டளையை எதிர்பார்க்கின்றேன் என்ருர். உடனே குலச்சிறையார் அரசன் உத்தரவு தங்களுடைய கருத்துக்கு மாறுபட்டதல்ல! ஆகவே நமது தெய்வத்திருவருள் நெறியை ஆரம்பிக்கலாம் என்ருர். உடனே சமண சாதுக்கள் சபை

விட்டு அகன்றுவிட்டனர். அரசனும் முகவாட்டத்துடன் அந்தப்புறம் சென்ருன்.

## அரண்மனையிலே ஆரியர்களின் ஆலோசனை

சம்பந்தர் கோபப் பொறி பறக்கும் கண்களோடு வீற்றிருக்கின்ருர், ஆரிய அந்தணர்கள் ஆழ்ந்த சிந்தனையோடு அமர்ந்திருக்கின்றனர். சமணர்களை எப்படி ஏடு விடும் போட்டியில் வெல்வது என்பதைப்பற்றி பலவாருக ஆலோசிக்கின்றனர். சம்பந்தர் எழுந்து சைவ அந்தண மெய்யன்பர்களே! நாம் இந்த சமணர்களை எவ்வித சூழ்ச்சியாலாவது வென்று, அவர்களை அடியோடு கொன்று நம் கொள்கையை இம் மதுரைமாநகரில் வசிக்கும் மக்களிடம் புகுத்தி, நம் வழிக்கு அவர்களைக் கொண்டு வரவேண்டும். சமணர் கொள்கையாகிய பகுத்தறிவுப் பாதையிலிருந்து மக்களை மாற்றி ஆலவாயானின் ஆலயத்திலே சரணமடையச் செய்யவேண்டும். இதுவரை நாம் செய்தது பெரிதல்ல, இனி நாம் கண்டுபிடிக்கும் சில தந்திரங்களினுல்தான் அவர்களையும், அவர்களின் கலைகளையும் அழித்து இந்நகரிலே பூரண வெற்றியை நிலைநாட்டவேண்டும். நேற்று அரச மண்டபத்திலே பேசிய சமணர்களின் வாதத்தை நீங்கள் நன்ருக கவனித்தீர்களா? அவர்களின் பேச்சினுல் மறுபடியும் மன்னன் மனமாற்ற மடைந்து விடுவானே என்று கூட பயந்தேன். நல்ல வேளை குலச்சிறையார் குறுக்கிட்டு பேசியிராவிட்டால் சமணர்கள் நாம் கையாண்ட, இனியும் கையாளப் போகும் சூழ்ச்சிகளை விவரமாக எடுத்து விளக்கியிருப்பார்கள், அதனுல் மன்னன் மனமாற்றமடைவது திண்ணம். அந்த ஆலவா

யானின், 'அருளால் அம்மட்டோடு குலச்சிறையார் கூக் குரலில் அவர்கள் எழுந்தே போய்விட்டனர். அவர்கள் போய்விட்டார்களென்று நாம் எண்ணக்கூடாது! அரசனைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஏதாவது நம் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டாலும் போட்டுவிடுவார்கள். அதற்குள் நாம் நமது சூழ்ச்சியைப் பிரயோகித்து நம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதுதான். இனியும் தாமதித்தால் ஒன்றும் நடக்காது. ஆகையினால் இங்குவீற்றிருக்கும் உங்களிலே அவரவர்க்குத் தோன்றிய சில 'தந்திர வழிகளை சொல்லுங்கள், பிறகு எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்து நாளை இந்த சமணர்களுக்கு முடிவு தேடிவிடுவோம் என்று ஆத்திரம் கலந்த குரலில் கூறி அமர்ந்தார். உடனே சிவபாத விருதயர் எழுந்து சம்பந்தா! என் அருமைச் செல்வ!, அரசனிடம் குலச்சிறையார் சொன்னது போல ஏடெழுதி நெருப்பிலே போடுவதும், ஏடெழுதி ஆற்றிலே போட்டு கரையெதிர்த்துப் போகச் செய்வதும் நம் மந்திர சக்தியால் செய்வது போல் பார்ப்பவர்க்கு இருக்கவேண்டும். ஆனால் முன்னெச்சரிக்கையாக சில ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அது என்னவென்றால்? முதலில் ஆற்றிலே விரைந்து செல்லும் மீன்களைப் பிடிக்கவேண்டும் என்று சொன்னார். என்ன! மீன்களையா! எதற்காக? என்று எல்லோரும் வியப்பாகக் கேட்டனர். இருதயர் ஆம் எப்போதும் ஆற்றிலே வசிக்கும் மீன்கள் ஓடிவரும் தண்ணீரை எதிர்த்தே செல்லும் இயல்புடையது ஆகையால் நாம் எழுதும் ஓலை நறுக்குகளை மெல்லிய கயிற்றின் மூலம் மீன்களின் வால்களில் கட்டி, அந்த

மீன்களை ஆற்றிலே விட வேண்டும். அப்போது ஏடு நீரின் மீதுமிதக்கும், மீன்கள் அதை இழுத்துக்கொண்டு தண்ணீருக்குள் செல்லும். பார்ப்பவர்க்கு ஏடு எதிர்த்து தண்ணீரில் செல்வது போல் தெரியும் என்றார். அங்கு இருந்த சம்பந்தரும், மற்றவர்களும் இருதயரின் புத்திக் கூர்மையைக் கண்டு ஆச்சர்யப்பட்டனர். இன்னும் கேளுங்கள் இந்த சிவபாத சிங்கத்தின் தந்திரத்தை. ஏடுகள் நெருப்பிட்டால் எரியாமல் இருப்பதற்கு ஒரு வழி யிருக்கின்றது. ஒரு விதப் பச்சிலைச் சாற்றைப் பிழிந்து ஏடுகளின் மேல் நன்றாகப் பூசி உலர்த்திவைத்துக்கொள்ள வேண்டும். பிறகு நெருப்பிலிட்டால் ஏடுகளுக்கு ஏதும் தீங்கில்லாமல் அப்படியே எரியாமல் இருக்கும். இந்த இரண்டுவித உபாயத்தால் நேற்று அரசனிடம் கூறிய நமது போட்டிகளில் வெற்றிபெறலாம். ஆனால் நாம் செய்யுமிந்த வேலைகள் நம் எதிரிகளுக்கு சிறிதளவேனும் தெரிந்துவிட்டால் நம்மை உண்மையில் மன்னன் கொன்றுவிடுவான் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றார். அங்கிருந்த அனைவரும் இருதயனை பலவாறாகப் புகழ்ந்தனர். சம்பந்தரும் தன் தந்தையைக் கட்டித் தழுவி கிடைத்தற்கரிய என் தந்தையே! தாங்களின் ஆலோசனைகளுக்கும், தந்திரவல்லமைகளுக்கும் எதிரில் யார்தான் நிற்க முடியும்! என்று புகழ்ந்து வணங்கினார்.

சம்பந்தரும் இந்த சமயத்தில் ஒரு அபார யோசனையை அங்கு சொன்னார்! என்னவென்றால்? என் தந்தையாரின் ஆலோசனைப்படி செய்யத்தான் வேண்டும், ஆனால் அதிலொரு அபாயமும் இருக்கின்றது.

நாம் சமணர்களை வைத்துக்கொண்டு இவ்வேலைகளைச் செய்தால் நம் தந்திரங்களை எப்படியும் அவர்கள் கண்டு பிடித்து அதை பலருக்கும் விளக்கிவிடுவார்கள். இவர்களால் மர்மம் வெளிப்படுமாகில் மக்கள் நம்மை சும்மாவிடமாட்டார்கள். ஆகையால் நாம் செய்யும் இந்த செயலுக்கும், சமணர்களுக்கும் சம்பந்தமே இருக்கக்கூடாது. நமக்கும் பாமரர்களுக்கும்தான் தொடர்புவேண்டும். நம்மவர்களில் சிலரை சமணர்கள் போல் வேஷம் போட்டு, போலியாக நடிக்க சொல்லி பாமரர் பார்க்க ஏடுவிடும்படி செய்து, கடைசியில் தோற்றூர்கள் எனக் கூறி நம் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டியதுதான் என்று சொல்லி எப்படி என் யோசனை என்றூர். ஆ! ஆ! சிவபாத சிங்கத்தின் வயிற்றில் சிற்றெறும்பா பிறக்கும்? என்று புகழ்ந்தார்கள் அங்கு கூடியிருந்தவர்கள். இச்செய்திகள் முழுவதும் அமைச்சர் குலச்சிறையாருக்கு இரகசியமாக அறிவிக்கப்பட்டது, அவரும் அதற்கு வேண்டிய ஆட்களுடன் ஆயுத்தமா யிருந்தார்.

## பாண்டியனும், சமணர்களும்.

இரவு பாண்டியன் அரண்மனையில் கவலைக் குறியோடு உலாவிக் கொண்டிருந்தான். சமண முனிவர்களில் சிலர் அரசனைக் கண்டு வணங்கினர், அவர்களைக் கண்ட மன்னன் சோகமாக முகத்தைத் தாழ்ந்திக் கொண்டு என்ன முடிவு செய்தீர்கள்? என்று கேட்டான். நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை வஞ்சகமே உருவான அந்த கபாலிகளிடம் எதையும் செய்ய மனம் வரவில்லை, அவர்கள் செய்த சூழ்ச்சிகளுக்கு

தாங்கள் மதிமயங்கி திகைத்து ஒன்றும் செய்ய வியலாமல் தவிக்கின்றீர்கள். இதற்கெல்லாம் காரணம் இந்த நாட்டு அமைச்சர் பெருமானின் இடைவிடா உழைப்பே! வடநாட்டில் தன் கொடியை வானளாவ பறக்கவிட்ட ஆரியப்படை கடந்த செழியன் வழித் தோன்றிய செம்மலே! உங்கள் வழி வழி வந்த வேந்தர்களிடம் இப்போது இருக்கும் சூழ்ச்சியின் சிகரமாகிய, இந்த நாட்டின் நலனையே நசுக்கும் மதிமிக்க மந்திரியாரைப்போல் யாருமிருந்திருக்கமாட்டார்கள், அப்படி இருந்ததும் கிடையாதென்பதை அவர்களின் வரலாறு சொல்லுகின்றது. இந்நாட்டின் துர்ப்பாக்கிய அமைச்சராகிய குலச்சிறையாரின் தலைமையில் பல குறும்பர்கள் வேலைச் செய்கிறார்கள். அதனால் நயவஞ்சகர்களின் பாசறைகள் பல எழும்புகின்றன. நாசவேலைகள் ஆங்காங்கு தொடங்குகின்றன. பெரும்பாலோரான பாமர மக்கள் அவர்களின் மாயஜாலங்களைக் கண்டு மிறண்டு அறிவிழக்கின்றனர். அறவுரைப் பகரும் இந்த நாட்டிலே அனாச்சாரம் இனி தலைவிரித்தாடுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையினால் அரசே! தாங்கள் நன்றாக சிந்தித்து முடிவு கூற வேண்டுகிறோம். எங்களைப் பொருத்தமட்டில் நாங்கள் கவலைப்படவில்லை, அறிவியக்கம் அழியக் கூடாதென்பதே எங்கள் அவா. அதை தாங்கள் மனம் வைத்தால் நிலைபெறச் செய்ய முடியுமென்றார்கள். இந்நேரம் செவி சாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்த ம்ன்னன் மனம் புழுங்கி முனிவர்களே! அன்று சபையில் ஏடுவிடும் போட்டியில் இறங்கச் சொன்னார்களே சம்பந்தர் முதலானோர் அதுபற்றி உங்களின்

கருத்தென்னவென்று கேட்டான். அதற்கு அவர்கள் நாங்கள் அந்த கழைக்கூத்து ஜால வேலைகளில் கலப்ப தில்லை யென்று முடிவு செய்துவிட்டோம் ஆகையினல் தங்களின் கருத்தையறிய வந்தோம் என்றனர். அரசன் சொன்னுன், நான் இப்போது இருதலைக் கொள்ளி எறும்பு போல் இருக்கின்றேன். என்னுல் எதையுமே சிந்திக்க முடியாதவனுய் அல்லல்ப் படுகின்றேன், கொஞ்ச நாளாக அமைதியை இழந்து நான் இருப்பதால் பிறகு என் கருத்தை நடு நிலையாக வெளியிடலா மென்று என்மனம் எண்ணிகிறது என்ருன். அரசனின் குழப்பமான சூழ்நிலையை அறிந்த முனிவர்கள் ஆவது ஆகட்டுமென்று அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

## அமைச்சரும், அரசியும்

அந்தப் புறத்திலே மங்கையர்க்கரசியை அமைச்சர் குலச்சிறைக் கண்டு புன்னகைப் பூத்தார், மந்திரியின் வரவையும், அவர் முகத்தில் புன்னகைஅரும்புவ தையும் கண்டு அரசி மிகவும் மகிழ்ச்சியோடு வர வேற்று அமைச்சரே! நமது விஷயங்களெல்லாம் என்ன வாயிற்று என்று கேட்டாள். அதற்கு அமைச்சர் எல்லாம் வெற்றியை நோக்கி விரைந்து செல்கி றது நமதியக்கம். நான் முக்கியமாக ஒன்று சொல்ல வந்தேன். நமது அரசரை இன்னும் நான்கைந்து தினத்திற்கு இந்த அந்தப்புறத்திலேயே தங்கியிருக்கும் படிசெய்ய வேண்டும். அரசர் இப்போது இருக்கும் நிலைக்கு இங்கேயே தங்கியும் விடுவார் என்றே நம்புகி றேன். எப்படியாவது அவரை இங்கேயே தங்கவைத் துவிட வேண்டும். அதுதான் தங்களின் கடைசி வேலை

என்றார். எதற்காக ? அவர்தான் நமது சைவம் புகுந்து விட்டாரே! இனி நமக்கு என்னகவலே? என்றாள். அமைச்சர்; அரசன் சைவம் என்னமோ புகுந்தது உண்மை தான், ஆனால் சமணம் அவரை இன்னும் தொத்திக் கொண்டேயிருக்கிறதுபோல் தெரிகின்றது. சமணத்தை அவர்விட்டாலும், சமணம் அவரை விடவில்லை என்பதை நான் கண்ணால் கண்டேன். சமணர்கள் அரசரை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசிப்போகின்றனர். மறுபடியும் அரசர் அவர்களின் தொடர்பு வைத்துக் கொண்டால் சமணம் புகுவது நிச்சயம். அந்த அளவிற்கு அவர்கள் அரசர் மதியைத் திருப்பி விடுவார்கள். ஆகையால் தாங்கள் தயைசெய்து அரசரை அந்தப்புறத்தைவிட்டு அனுப்பாதீர்கள். நான் சொல்வது போல் கொஞ்ச நாள் அரசரை வெளியில் அனுப்பாமல் இருந்தால், அதற்குள் சமணர்களை நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். அதற்கு வேண்டிய ஆக்கவேலைகள் சம்பந்தரும், அவரது ஆட்களும் செய்து வருகின்றார்கள் என்றார். இதைக்கேட்ட மங்கையர்க்கரசி அகமகிழ்ந்து குலச்சிறையாரே-தாங்கள் கொஞ்சமும் தயங்காமல் நமது காரியங்களை சம்பந்தரைச் செய்யச் சொல்லவும். நீரும் மிக எச்சரிக்கையாயிரும், அரசரை எப்படியும் இங்கேயே தங்கச் செய்து விடுகிறேன், நாம் இது காலம் செய்து வந்த மதத் தொண்டு வெற்றியடையும் தருவாயில் நான் சோர்ந்துவிட மாட்டேன். ஆலவாயானின் அருளாலும், சம்பந்தர், தாங்கள் போன்றவர்களாலும் இனி நமக்கு முழுவெற்றி கிடைக்குமென்பதில் எனக்கு ஒருவிதமான அச்சமும் இல்லை. ஆகையால் நடக்க வேண்டியவற்றிற்கு

நான் இருக்கின்றேன். தாங்கள் சென்றுவாரும் என்ருள். குலச்சிறை ஒளிவீசும் கண்களுடனும். வஞ்சம் நிறைந்த நெஞ்சுடனும் வருகிறேன் என்று விடைபெற்றுச்சென்ருர்.

## ஆற்றங்கரை

திருஞான சம்பந்தரின் திருக்கூட்டத்தார், தாங்கள் செய்துவைத்திருந்த முன்னேற்பாட்டின்படி சமணர்கள் போல் நடித்த அவர்களின் கையாட்களையும், பல பாமர மக்களையும் சேர்த்துக் கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அவர்கள் திட்டப்படி ஏடுகள் முடிந்திருக்கும் மீன்களை எவரும் புரிந்துக் கொள்ள முடியாதவாறு தண்ணீரில் போட்டனர். அவைகள் நீரை எதிர்த்துச் சென்றன. இவனைக் கண்ட பாமரமக்கள் ஆ! ஆ! சம்பந்தரின் தெய்வ சக்தியே உயர்ந்தது! அவரின் மதமே உயர்ந்த மதம்! என்று கூவினர். உடனே சிவபாத விருதயர் எல்லோர்கையிலும் விபூதியைக் கொடுத்து நெற்றியில் பூசிக்கொள்ளச் சொல்லி அர அர நமப்பார்வதி பதயே! அர அர மாஹாதேவ என்ற சைவத்திற்கே சாசுவதமான சொற்களைச் சொல்லிக் கொடுத்து கோஷம் போடச் செய்தார். பிறகு ஏடுகளை தீயில் போட்டுக் காட்டினுர். சம்பந்தர். எரியாமையைக் கண்டு இன்னும் அதிக ஆச்சர்யமடைந்த பாமர மக்கள் வானைப்பிளக்க நமச்சிவாயா! என்ற சத்தத்தை கிளம்பினர், பாவம் ஏமாந்த கூட்டத்தினரால் ஏய்ப்பவர்களின் எண்ணம் ஒருவாறு ஈடேறியது. இவைகள் அனைத்தும் சமண முனிவர்களுக்குத் தினையளவும் தெரியாது அந்த அளவிற்கு அதுசீக்கிரமாக தங்களின்

மாய வேலைகளை முடித்து வெற்றியும் பெற்றுவிட்டனர்.

## படுகொலைப் படலம்!

நகருக்குப் புறத்திலே பெரிய திடல். அதில் நெருக்கமாக பல மண்மேடுகள். அதிலே பல கழுமரங்கள் நாட்டப்பட்டிருந்தது. அந்த கழுமரங்களின் கூர்மை பார்ப்போரின் கண்களில் நுழைவதுபோல் பயம் கொடுத்தது. கழுமரங்கள் நாட்டப்பட்டிருப்பதைக் கண்டு பிணம் புசிக்கும் கழுகுகளும் ஆகாயத்தில வட்டமிட்டு பறந்து கொண்டிருந்தன. ஏமாந்த மக்களிடத்தில் ஏற்றங்கொண்ட சம்பந்தரின் சகாக்கள் சமணர்கள் ஏடுவிடும் போட்டியில் தோற்றதாகவும், சம்பந்தர் ஆலாவாயானின் அருளால் வெற்றியடைந்தாரென்றும் ஊரெங்கும் பரப்பினர். தோற்ற சமணசாதுக்களை கழுவிலேற்றும்படி மன்னன் ஆணை என்று சொல்லி வந்த சிறுக் கூட்டத்தார், இருந்த பெரும் கூட்டத்தை கொன்றனர். குலச்சிறையார் ஈவிரக்கமின்றி சமணர்களை வெட்டி வீழ்த்தினர். இத்துடன் விட்டாரா குலச்சிறை? சமண சமயத்தைச் சார்ந்த ஆண்களையும் பெண்களையும் கழுவிலேற்றுமிடத்திற்கு பிடித்துவருவதும், அவர்கள் எதிரில் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யா சமண முனிவர்களைக் கழு மரத்தில் ஏற்றி ஏ! சமண புழுக்களே! நீங்கள் வைதீக சமயங்களில் எதிலாவது சேருகின்றீர்களா? அல்லது நீங்களும் உங்கள் முனிவர்களின் கதியைப் போன்று கழுமரத்தில் சாகின்றீர்களா? என்று கேட்டார். அந்த சித்ரவதையைக் கண்டு சகியாமல் தங்கள் குருமார்களின் நிர்க்கதியான நிலை

மையைக் கண்டு ஒன்றும் தோன்ருது, கலங்குகின்ற னர். சிலர் கதறி அழுகின்றனர், சிலர் உயிர்துறந்தனர், சிலர் மதம்மாறினர். சம்பந்தர் குலச்சிறையாரை நோக்கி எங்கே அன்று அரசஅவையில் அறம்பேசிய பவணநந்தி! என்ருர். ஆம்! அவனைக் கழுவிலேற்ருது இவ்வியக்கம் முடிவுருது தங்கள் முன்ஞலேயே அவனை கழுவிலேற் றிக்காட்டுகிறேன் என்று சபதம் கூறி அதற்கென பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் குலச்சிறை!

## பவணநந்தியாரின் கழுவேற்றம்!

நந்திமித்திரா! நீ இன்றே ஆனை மலையோ, பசு மலையோ சென்று அங்கே ஒளிந்துக் கொண்டிருக்கும் பவண நந்தி என்ற சமண முனிவனை உடனே பிடித் துக்கொணரல் வேண்டும். உன்னுடன் நான்கைந்து வீரர்களை அழைத்துக்கொண்டு போவது நலம். அவன் மகா ஜாலவித்தைக்காரன். ஆகவே மிக ஜாக்கிரதை யாகச் செல்ல வெண்டும். நமது வைதீகத்தின் வைரி, வேத விரோதி என்பதை மனதிலிறுத்திக் கொண்டு எவ்வாருகிலும் தந்திரமாகப் பிடித்து வரவேண்டும். எல்லாம்வல்ல நமது சிவபெருமான் அருளால் ஆபத் துக்கள் நேராமல் வருவாயாக! வெற்றியுடன் வருக; என்று குலச்சிறை ஆணையிட்டு ஒரு ஓலைச் சுருளையும் நந்திமித்திரன் கையில்கொடுத்தார். உத்திரவை ஏற்றுக் கொண்ட நந்திமித்திரன் தனக்கு நம்பிக்கையுள்ள நான்கு வீரர்களை அழைத்துக் கொண்டு ஆனைமலையை நோக்கிச் சென்ருன். ஐவரும் வேகமாக நடந்து மலைய டிவாரத்தையணுகினர். அங்கு ஒரு காட்டாறு ஓடிக் கொண்டிருந்தது, அதற்குப் பக்கத்தில் ஒரு சிறு குடி-உ

தென்பட்டது. அதன் பின் புறத்தில் அழகான தோட்டமும் தென்பட்டது. இதுயாரோ குடியானவன் வீடாகவேயிருக்க வேண்டுமென எண்ணி அங்கு சென்று கதவைத் தட்டினார்கள்.

கதவு திறந்தது, ஒரு மனிதன் தோன்றினான், அவனுடைய தலைமயிரும், தாடியும் நீண்டிருந்தன. இடுப்பில் கௌபீனம் மட்டுமேயிருந்தது. அவன் உடம்பெல்லாம் வியர்வைக் கொட்டிக் கொண்டிருந்தது. அவனது வலது கையில் ஒரு களைக்கொத்து காணப்பட்டது. அவனுக்குச் சுமாா அறுபது வயதிருக்கும் அவன் புன்னகையுடன் வாருங்கள் ! உள்ளே வாருங்கள் ! இக்குடில் உங்களுடையதே எனக்கருதித் தாராளமாக உள்ளே நுழையலாம் என்ன !? படை வீரர்களா ? என்றான்.

ஆம் ! வெம்பகை வரையும்விடக்கொடியவனையும், வைதீக சமயத்தைப் பழிப்பவனையும், கள்ளர்களைப் போல் இம்மலைகளில் பதுங்கிக்கிடக்கும் கபட சமணர்களின் தலைவனையும், குட்டிச்சாத்தானை ஏவும் ஜாலக்காரனையுமுள்ள ஒருவனைத் தேடிக்கண்டு பிடித்து அரசன் முன் கொண்டு போகவே வந்திருக்கிறோம் என்றான் நந்திமித்திரன்,

அவர் பெயரென்ன ? அவன் பெயரா ? நந்திமித்திரன் ஓலையைப் பார்த்து பவணநந்தி என்றான. பவணநந்தியா ? அவரை எனக்கு நன்றாகத் தெரியுமே! அவர் ஒரு தமிழ் முனிவர் என்றான் கிழவன்.

ஆம் தமிழ் முனிவன்தான்! ஆனால் வேத வேள்வியை நிந்திக்கும் சமணன். ஆகவே அரசாங்கம் அவனை

கொடியவனுகக் கருதுகின்றது. உண்மையே, தங்களுடைய உத்திரவில் கண்டபடி அவர் மிகவும் கொடியவர் தாம்! வைதீகமதத்தைப் பழிப்பவர்தாம்! சூரியன் மறைவதற்குள் அவரை நானே அழைத்துவருகிறேன்: உங்களுக்கு கவலேவேண்டாம் அவர் உங்களது வசமே இருக்கின்ருரென்றே வைத்துக்கொள்ளுங்கள் அதற்குள் நீங்கள் கொஞ்சம் ஆகாரஞ் செய்துவிட்டு இலேப்பாருங்கள் என்ருன் கிழவன்.

உடனே அம்மனிதர், உள்ளே சென்று இளநீர்களேயும், மலேவாழைப்பழத்தார்களேயும், அடுப்பில் போட்டுச் சுட்ட வள்ளிக்கிழங்குகள் சிலவற்றையும் அவர்கள் முன் கொண்டுவந்து வைத்து சாப்பிடுங்களென்று மிக அன்புத்ததும்ப சொன்னுர். நந்திமித்திரனும் அவனுடைய வீரர்களும் பின்னர் சிற்றுண்டியை அருந்தினர். நந்திமித்திரன் விருந்திட்டவரை நோக்கி பெரியவரே! இளநீர் தேவாம்ருதமாய்இருக்கிறது மலேப் பழங்கள் மிக இனிப்பாயிருக்கின்றன, மன்னருடைய தோட்டத்திலும் இத்தகைய பழங்கள் அகப்படுவது அரிது என்ருன், கிழவரும் அடங்கா மகழ்ச்சிக் கொண்டார். வெய்யில் கடுமையாயிருக்கவே விருந்தினர் சற்று படுத்து உறங்கினர். இதற்குள் கிழவர், பவணநந்தி வதியும் குகையை நாடி ஓடினுர். முனிவ்ர் அப்பொழுது தான் தியானத்திலிருந்து எழுந்தார். கிழவரும் வாடிய முகத்துடன் முனிவரைப் பணிந்தார். முனிவர் அவருடைய முகவாட்டத்தைக் கண்டு கிழவரே இன்று உமக்கு என்ன நேர்ந்தது. முகத்தில் கவலேக் குறிகள் காணப்படுகின்றனவே என்ருர். சுவாமி! தாங்களுக்காகவே ஓடோடி வந்தேன்! எனக்கு தாங்களேவிட வேறு

கவலையில்லை. உடனே முனிவர் என்ன சேதி பாண்டிய மன்னனின் தூதுவர்கள் வந்துவிட்டார்களா? என்று கேட்டார். ஆம்! தாங்கள் உடனே இவ்விடத்தைவிட்டு புறப்படவேண்டும். இரண்டு மணிக்கெல்லாம் தங்களை பிடித்துத் தருவதாகக் கூறினேன் அதனால் அவர்கள் அயர்ந்து தூங்குகிருர்கள். இதுதான் சமயம்! தாங்கள் காலதாமதமின்றி புறப்படுங்கள்.

உன்னுடைய பக்தியை மெச்சினேன்! நான் இன்னும் எத்தனை நாளைக்குத் தலைமறைவாகயிருக்க முடியும்? இரண்டு வாரங்களாக நடைபெறும் கழுமரத்தின் கொடுமையை என்னென்று வருணிப்பது! எத்தனை ஆயிரம் முனிவர்கள் சித்ரவதைக்கு ஆளானுர்கள்! தமிழர்களின் சுதந்திரத்திற்காகவன்றே தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள்! வைதீகசமயம்பரவினுல் தமிழ் நாடு அறியாமை என்னும் இருளில் வீழவேண்டியதுதான். அறத்தினைக்காக்க வேண்டி மரணத்தையேற்றுக் கொண்ட முனிவர்களின் வழியிலே நானும் செல்ல வேண்டும். என்னைக்காப்பாற்ற வேண்டி நீர் செய்த சூழ்ச்சியை அவர்கள் அறிந்துவிட்டால் நீர் மாத்திரமா தண்டனைக்காளாவீர்? பெரியவரே! ஒரு குற்றமும் அறியாத உன்னுடைய மனைவி மக்கள் ஆகிய சுற்றமனைத்தையும் அழித்து விடுவார்கள்! ஆகவே நீர் வருந்தாதீர். நேரே சென்று முனிவர் வருகின்ருர் என்று அவர்களிடம் கூறிவிடும், நான் புறப்பட்டு வருகிறேன். உடனே கிழவர் உதடுகள் துடிக்க! அந்தோ! சுவாமி! மரணத்தருவாயிலுமா அறத்தொண்டு? வேண்டாம் எனது சூழ்ச்சியை எவரும் அறியமாட்டார்கள் தாங்கள் விரைந்து வேறிடம் சென்றுவிடுங்கள் என்று

கலங்கினர், பெரியவரே! உம்முடைய எண்ணம் போலாகட்டும், நீர் நேராக உம்முடைய இடத்திற்குச் சென்றுவிடும் என்ருர். இவ்வார்த்தையைக் கேட்ட கிழவனர் சிறிது ஆறுதலடைந்து குடிலை நோக்கிச் சென்ருர்.

வெப்பம் குறைந்தது மணி சுமார் மூன்றிருக்கும் வீரர்கள் விழித்துக் கொண்டனர். அந்த மாயக்காரச் சமண முனிவனை எப்படியாகிலும் பிடித்து இரவே அரண்மனை போய்ச் சேர வேண்டும் என நந்திமித்திரன் கவலைப்பட்டான். கடைசியாக விருந்திட்ட பெரியவரை நோக்கி பெரியவரே! அந்தப் பவணநந்தியின் சமாச்சராமென்ன? என்ருன். கிழவனர் ஒன்றுங் கூருமல் மௌனம் சாதித்தார் அதே விநாடியில் அண்டையில் மறைந்திருந்த பவணநந்தியார் மிக அமைதியுடனும், கலக்கமென்பது சிறுதுமின்றியும் நந்திமித்திரனையணுகி "ஐயன்மீர்" நான்தான் பவணநந்தி! என்ருர். முனிவர் பெருமானைக் கண்டதும் கிழவனர் அயர்ந்து நின்றுவிட்டார். கண்கள் கலங்குகின்றன! துக்கத்தால் நெஞ்சு அடைத்துவிட்டது! தலையைக் குனித்துக் கொண்டு கண்ணீர் வடித்தார். நந்திமித்திரன் பெரியவரைப் பார்த்து இவர்தான பவணநந்தியார் என்ருன். உடனே பவணநந்தி நான்தான் இதோ பாரும் பாண்டிய மன்னனல் இங்குள்ள மலைக்கோயிலுக்கு இறையிலியாகவிட்டதானபத்திரம் என்று பத்திர ஓலையை நீட்டினர். நந்திமித்திரன் தானபத்திரத்தை படித்தான் பவணநந்தி முனிவர் எனப் பெயரும் அப்பத்திரத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. நந்திமித்திரன் வருத்தத்தி

லாழ்ந்தான்! பவணநந்தி முனிவர் ஒரு குற்றத்தையும் அறியாத நிரபராதி!

சமய வெறியினுல் குலச்சிறை கையாளும் கொடுமையாலன்றே இம்முனிவருக்கு இன்று மரணம் சம்பவிக்கப் போகின்றது. ஆ! என் செய்வேன்! என ஏங்கிஞன். ஆயினும் அவன் என்ன செய்ய இயலும்! பவணநந்தியை அழைத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லே. உடனே எல்லோரும் புறப்பட்டனர். முனிவரின் நிலேயை எண்ணியெண்ணிப் புழுங்கிய கிழவனுர், அவர்கள் புறப்பாட்டைக் கண்டு மயக்கத்தால் மண்ணில் சாய்ந்தார். முனிவர் கிழவனுரின் அன்புருபக்தியைக் கண்டு வருந்தியவராகி அவர்களுடன் வேகமாக நடந்தார், எல்லோரும் நள்ளிரவில் தலைநகரை வந்தடைந்தனர்.

மறுநாள் மாலே மூன்று மணிக்குப் பவண நந்தியடிகள் கழுக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். கழுமரம் தயாராக நின்றது. அதன் கூர் முனே மாலே வெய்யிலில் தளதளவென்று ஜொலித்தது. அதைச்சுற்றிலும் பிராமணர்களும் மற்றும் சிலரும் கூடியிருந்தனர். முனிவர் பெருமானே! அறமே உருவாகிய அறிஞனே! தமிழ்த் துறவியை! கழுமரத்தினருகே அழைத்து வந்து நிறுத்தினர்.

அங்கு கூடியிருந்த ஆரியர்கள் குதூகலத்துடன் கைதட்டி ஆரவாரித்தனர். அவர்கள் முகத்தில் என்றுமில்லாத வெற்றியின் ஒளி வீசியது. அவர்கள் உள்ளத்திலே ஆனந்தம் நர்த்தனம் புரிந்தது. பிணங்கள் குவிக்

கப்பட்டிருக்கும் அந்த மயானப் பூமியிலே நின்று எக்களித்துக் கொண்டிருந்த பிராமணர்களின் கேலிச் சிரிப்பு பேய்கள் சிரிப்பதுபோல் காட்சியளித்தது. இந்த அமளிக் கிடையே திருஞான சம்பந்தர் கொக்கரிக்கும் தன் இயற்கைக் குணத்தால் ஒரு பெரு நகைப்பு நகைத்துவிட்டு கழுமரத்தின் அருகில் நிற்கும் பவணநந்தியை இமை கொட்டாமல் பார்த்தார். சம்மந்தரின் கேலியும், வெறியும் நிறைந்த பார்வையைக் கண்ட பவண நந்தி! வஞ்சனை, சூது, தந்திரம், ஆகியவைகளால் வெற்றிபெற்று விட்டோமென்று வீருப்புக் கொண்டிருக்கும் விப்ரர்களே! இன்று எங்கள் வீழ்ச்சி காலப் போக்கில் உங்கள் வீழ்ச்சி என்பதை மறந்துவிடாதீர்கள். வீழ்ச்சியுற்ற மக்கள் என்றுமே உங்களின் வஞ்சக வலையில் வீழ்ந்துகிடக்க மாட்டார்கள். விழிப்புற்ருல் வீறுகொண்டெழுவார்கள். அந்தப் புரட்சிப் புயலிலே நீங்களெல்லாம் சிறு அணுக்களாகி விடுவீர்கள் என்பதையும் நினைவில் வையுங்கள். இப்போதல்ல எதிர்காலத்தில் எப்போதாவது மக்கள் விழிப்புறுவார்கள். நீங்கள் வேதனைப் படப்போவதென்பது நிச்சயம்.

உங்கள் கடவுளையும், மதக்கோட்பாட்டையும் மக்கள் நன்கு புரிந்து கொள்ளாத வரையில் உங்களுக்கு ஏற்றம்தான். உங்கள் மதத்தின் மர்மத்தின் ஒரு சிறு பகுதி இப்போது இங்கு நிற்கும் மக்களுக்குப் புரிந்திருந்தால் நீங்கள் அனைவரும் எங்கள் நிலையை அடைந்திருப்பீர்கள். இன்று மதோன்மத்தர்களால் இழைக்கப்பட்ட கண்முடிக் கயமைத் தனமான தீர்ப்பு உங்களுக்கு மக்களால் ஒரு காலத்தில் வழங்கப்படும் என்பதை இக்கால நிகழ்ச்சிகளால் ஒருவாறு அறிந்து

கொள்ளுங்கள். ஒன்று உங்கள் நினைவிலிறுத்துகிறேன் அறிவியக்கம் இத்துடன் அழிந்துவிட்டதென்று ஆனந்தப் படாதீர்கள. அறிவியக்கம் அழிந்தது இந்நகரில் மட்டுமே! ஆனால் உலகம் என்பது இந்த மதுரைமாநகரமல்ல! அது பரந்துக் கிடக்கின்றது. அதுபோல் எங்கள் அறிவும் நாங்கள் வளர்த்த பகுத்தறிவுக் கலைநூல்களும் ஆழ்ந்து, அகன்று, பரவிக் கிடக்கின்றது. அதை அழிக்க உங்களாலும் முடியாது, உங்கள் சிவனாலும் முடியாது என்பதை மறக்காமல் என்றும் இதயத்தில் இறுத்துங்கள். அழிவது நாங்கள் மட்டுமே அதனால் விழுவது இந்த திராவிட நிலம்! இனி தமிழன் தலை நிமிர்ந்து நடக்க முடியாத தமிழர் வீழ்ச்சி உங்கள் காலத்திலிருந்து ஆரம்பமாகிறது. வீழ்ச்சி! ஆம் தமிழர் வீழ்ச்சிதான்! விழிப்பு ஏற்படும் வரை வீழ்ந்துதான் கிடப்பான் தமிழன். என்று மனம் நொந்து, வீரம் அந்த வேதனையிலே படர புன்னகையோடு பவணநந்தி புகன்றார். சாவின் எதிரே இலட்சிய வீரர்கள் சிரிப்பது இயற்கை யன்றோ!

பவண நந்தியின் கருத்தமைந்த, மறம் நிறைந்த வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த வைதீகக் கூட்டத்தார் குமுறினர். சம்பந்தர் உதடு துடிக்க, கண் சிவக்க, அங்கம் ஆட்டங் கொடுக்க ஏ! சமணப் பதரே! நிறுத்து! சாவின் முன்னே சபதம் கூறுகிறாய்! இன்னும் க்ஷண நேரத்தில் அகலப் போகின்றது உன் இயக்கத்தின் கடைசி மூச்சு! எள்ளை யசைக்க இயலாத உங்கள் இயக்கத்தால் என்ன செய்ய முடிந்தது? அழிந்தீர்கள் ஆவணக்காரர்களே! பக்தி மார்க்கத்தைப் பழிக்கும் சிவத் துரோகிகளாகிய நீங்கள் கழுமரத்தின் கூறின் முன்னே புரியுங்கள் உங்கள் பிதற்றலான வாதத்தை! பறிதலை அமணர்களே, பாய் உடுப்பவர்களே! எங்கே உங்கள் அருகன்! இப்போது எங்கு ஓடி ஒளிந்தான்? உன் அருகனே அகப்பட்டாலும் இந்த

கழுமரத்தின் சக்தியை அவனுக்கு காட்டுவேனே! மண்ணுலக வாழ்வுக்கும், விண்ணுலக வாழ்வுக்கும் இன்பத்தைத்தராத உங்கள் மதக்கொள்கைகளை மக்கள்வெறுத்ததின் விளைவுதான் இப்போது அனுபவிக்கும் வேதனை! காட்டுமிராண்டித்தனமாகிய உங்கள் துறவுத்தன்மையைகாண சகிக்காத மக்களின் ஆவேசம்தான் நீங்கள் இப்போது அவதிப்படுத்துவது! நாஸ்தீகம் பேசி நாத்தழும்பேறியஉங்களது சழக்குத்தனத்தால்விளைந்தசங்கடம்தான் இந்த தண்டனை ! மனம் ஒருமைப்பட்டு ஒழுகும் பக்தி மார்க்கத்தையும், இல்லறத்திலிருந்தே அன்பால் ஆண்டவனையடையலாம் என்ற சைவசமயக் கொள்கைளையும் எதிர்த்ததின் எதிரொலிதான் உங்கள் வர்க்கம் கழுவில் ஏற்றப்படுவது! ஏ! அருகப்பித்தனே! உன்னோடு அழியும் சமணசமயம் நாங்கள் இந்த உலகத்தில் வாழும் வரையில் தலை தூக்காது, தூக்கவிட மாட்டோம். நாளடைவில் குறைந்து குறுகி, கறுகிப்போகும், ஆலவாயனின் அருள் எங்களுக்கு இன்று போல் என்றும் இருக்கும். எங்களை எதிர்த்துஎந்த நாட்டு மன்னன் வாழ்ந்தான்! நீயும்படித்திருப்பாய் சாகும் தருவாயிலாவது அதை மறுபடியும் நினைவிற்குக் கொண்டுவா என் இடிமுழக்கமிட்டு ஏ! பவணநந்தி ஏறுகழுமரம்! உம் ஆகட்டும் எங்கே குலச்சிறை! என்று கூவினர். சம்பந்தரின அரக்கத்தன்மையைக் கண்ட தமிழர்களில் பலர் மௌனமாகவே மரம்போல் நின்று விட்டனர். குலச்சிறை அரசனையும், அரசியையும் அழைத்துவரும்படி ஒருவனை ஏவினர். ஆனல் வந்தது அரசி மட்டுமே! குலச்சிறையும், மங்கையர் குலத்திற்கே மாறுபட்ட மங்கையர்க்கரசியும் குதூகலத்தில் ஆழ்ந்தார்கள். ஆரியர்களும் பலவாருகப் பேசிக்களித்தனர்.

நந்திமித்திரன் ஒருவனே மௌனமாகவும், கவலைக் குறியுடனும் காணப்பட்டான். அவன் கழுமரத்தினடியில் நின்ற பவண நந்தியடிகளை நோக்கி "முனி புங்க

வரே! நானும் உம்மைப் போலவே சமணனாக இருந்த வன். சில காலத்திற்கு முன்புதான் வைதீக சமயங்களில் ஒன்றாகிய சைவ சமயத்திற் புகுந்தேன். காலத்தின் போக்குப்படி மாறினாலன்றி உயிர் வாழ முடியாது என்பதைக் குறித்து தங்களுக்கு அதிகம் கூற வேண்டுவதில்லை. தாங்கள் வளர்த்த அறங்களும், கலைகளும் தாங்களோடு அழியாமல் வளரவேண்டுமானால் தாங்கள் சமயம் மாறியே ஆகவேண்டும். இப்பொழுதே சைவசமயம் புக ஒப்புக்கொள்வீராயின் மன்னனது அருளைப் பெற்று உயிர் தப்புவது நிச்சயம். என்ன சொல்லுகின்றீர்கள்! தாமதமின்றி உடனே பதில் கூறும் என்றான்.

"நந்திமித்திரா! என்பொருட்டு நீ இரங்குவதைக் காண என் மனம் இளகுகிறது. ஆனால் உன் புத்திமதியை நான் ஏற்க இயலாதவனா யிருக்கின்றேன். தமிழர்களின் அறிவியக்கச் செம்மையை நீ அறிந்திருக்கின்றாய்! வள்ளுவரால் இயற்றிய திருக்குறளைப் படித்திருப்பாயன்றோ! அவ்வாறிருக்கும்போது வைதீக சமயத்தில் எவ்வாறு நான் புகமுடியும்! சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட அவ்விப்ர கோஷ்டியார்கள் நம்மைப் பிளவு படுத்தவே இந்த சூழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். பக்தியையே வற்புறுத்தி ஒழுக்கத்திற்கு ஏற்றமளியாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலமாக அமைக்கப் பெற்ற அச் சமயங்களை நான் வெறுக்கின்றேன். மேலும் வைதீக சமயத்திற்குத் தமிழ்நாடு தலை குனிந்தால் அத்துடன் தமிழ்நாட்டின் பெருமை குன்றி அடிமையில் ஆழ்ந்து பல ஆயிரம் ஆண்டுகள் தலையெடுக்காமல் குன்றிபோய்விடும். தமிழர்கள் அனைவரும் தங்கள் உயரிய பண்பினின்றும், நிலையினின்றும் நழுவிவிடுவார்கள். அடிமைகளாகவும், பாமரர்களாகவும் வாழும்படி நேரும். ஆகவே நான் மதம் மாறினால் அத்தகைய பரிதாப நிலைக்குத் தமிழ்நாடு வருவதற்

குக் காரணனாக ஆவதோடு அந்த பெரும்பழிக்கும் ஆளாவேன். சுதந்திரத்திற்காக உயிரைத் தியாகம் செய்த ஆயிரக் கணக்கான முனிவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி செல்ல நான் தயாராக நிற்கின்றேன். ஆகையினால் என்னைப் பற்றிக் கவலையே வேண்டாம். எனது கடைசி தியானத்தைச் செய்ய ஐந்து நிமிஷம் சவகாசம் கொடுத்தால் போதும் என்றார் பவணநந்தியடிகள்.

நந்திமித்திரன் அவ்விதமே அனுமதிக்க பவணநந்தியார் அமர்ந்து கண்களை மூடித் தியானம் செய்தார். பின்னர் கண் விழித்துக் கைக்கூப்பிக்கொண்டு.

“அன்பே வாழ்க!”

“அறமே வளர்க!”

என்று உரக்கச் சொன்னார். பிறகு நந்திமித்திரனை நோக்கி உமது காரியத்தை நடத்தலாம் என்றார். குலச்சிறையார் வந்து நின்றார். உடனே கொலைஞர்களுக்கு உத்தரவிட்டார். பவணநந்தியார் கழுவிலேற்றப்பட்டார், கழுமுனை அவருடலைக் குத்திக் கிழித்தது. உதிரம் ஆறாகப் பெருகியது. அப்போதுங்கூட “தமிழர் வாழ்வே இன்றோடு வீழ்ந்ததையா” என்று அவரது உதடுகள் உச்சரித்ததை சங்கு கூடியுள்ள யாவரும் கேட்டனர்.

அந்த உச்சரிப்போடு நமச்சிவாயா வாழ்க வாழ்ந்தது சைவம்! வீழ்ந்தது சமணம்! பக்திமார்க்கம் பரவுக! பகுத்தறிவு மார்க்கம் மறைக! என்ற தங்களுக்கே உரிய, உயரிய மந்திரத்தை வைதீகக் கூட்டத்தினர் கூவினர்.

## மன்னனின் மன வேதனை.

கழுமரக் காட்சியைக் கண்டு களித்துவிட்டு மங்கையர்க்கரசி அரண்மனை திரும்பினாள். மறையவர்களும்

அவரவர் இடங்களுக்குப் போய் விட்டனர். பிறகு திருஞான சம்பந்தர் முதலானோர் தங்கள் காரியம் முடிந்தமையால் குலச்சிறையாரின் தக்கப்பாதுகாப்புடன் சோழ நாடு புறப்பட்டனர். அரண்மனையின் மேல்மாடியில் மன்னன் மனவேதனையோடு அங்கும், இங்கும் உலவிக் கொண்டிருந்தான். வெளியில் ஓம், ஓம் என்ற சத்தம் கேட்டு கீழேபார்த்தான். பல்லக்கிலிருந்து அரசி இறங்குவதை. மதவெறி கொண்ட அம்மங்கையைக் கண்ட அவன் மனம் வெதும்பிற்று. அரசியும் அந்தப் புறம் சென்றாள், அப்போது அவன் மனம் என்ன எண்ணியிருக்கும்! நம்மூதாதையில் ஒருவனான வெற்றிவேற் செழியன் காலத்தில் கற்புத்தெய்வம் கண்ணகிக்கு பொற் கொல்லரின் தலை ஒராயிரம் உருளப் பலிகொடுக்கப்பட்டது! அந்த படுகொலையை தமிழ் சமூகம், இந்த திராவிட சமூகம் இருக்கும் வரை மாறுக்கறையாக வழி வழி வரும் மக்கள் நிந்திக்க ஏட்டிலே வரையப்பட்டிருக்கிறது! அந்த கறைபட்டு மறையாமல் இருக்கும் நம் பாண்டிய வம்சம் மற்றொரு கறையாக அமைந்த இந்தப் படுகொலையையும் ஏற்றுக் கொண்டது. என்னுடைய காலத்தில் நடந்த இக்கோரசம்பவத்தையும் பார்க்கும் எதிர்கால மக்கள் என்னை எந்த அளவிற்கு நிந்திப்பார்களென்று எண்ணவும் வேண்டுமோ! இதற்கெல்லாம் எது காரணமாய் இருக்க முடியும்? அரசன் சூழ்ச்சிக் காரர்களின் வலையில் விழுவதுதானே காரணம் என்று பலவாறு எண்ணியெண்ணி வேதனைப்பட்டுத்தானே இருக்கும்! ஆயினும் என்ன செய்வது? அவன் சைவத்தை தழுவியதால் எதையும் எடுத்தியம்ப முடியாதவனாய் மௌனமாகவே இருந்து விட்டான் போலும். அவன் வாழ்நாள் பூராவும் அப்படியேதான் இருந்திருப்பான். ஏனென்றால் மேலே குறிப்பிட்ட அதிர்ச்சி அவனை அல்லல் படுத்திக் கொண்டேயிருந்திருக்கும். அந்த நாட்டிலே பிறகு முடியாட்சியே இருந்தி

ருக்காது இப்போது இருக்கும் அமைச்சர் ஆட்சியே அப்போது ஆட்சி செலுத்தி இருக்குமென்பதை நாம் ஒருவாறு ஊகிக்கவேண்டியிருக்கிறது.

## பிணக்களம்

இரவு நேரம் நடுநிசி! மதுரைமா நகரமே அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. இரண்டுநாளாக கொன்று குவிக்கப்பட்ட பிணக் கூட்டத்தின் துற்நாற்றம் அந்த நகரையே சூழ்ந்து கொண்டிருந்தது. அங்கு பிணக்களத்திலே நாய்களும், நரிகளும் பேய் போன்று அலைந்து, பிணங்களிடம் வட்டமிட்டுக் கொண்டு அப்பிணங்களை புறட்டியும், பிய்த்தும், இழுத்தும், குதறியும், பிடுங்கியும் தின்றுகொண்டிருந்தன. எங்கும் பயங்கர அமைதி. அவ்வமைதியின் நடு நடுவே நரிகள் மெல்லியகுரலில் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. அந்த கும்மிருட்டிலே ஓர் உருவம் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தது பிணக்காட்டை நோக்கி. வந்த உருவம் கொஞ்சமும் அஞ்சாமல் நாய், நரிகளை விலக்கி ஒவ்வொரு பிணமாய் பார்த்துக் கொண்டே வந்தது. நெடு நேரம் பார்த்தது. பிறகு ஒரு கழுமரத்தினருகில் சென்று கொஞ்சம்நேரம் உற்றுகவனித்துவிட்டு ஐயோ! ஆ முனிபுவங்கவரே மாண்டீரா! மாண்புடைய உங்களை இனி எப்போது காண்பேன், இனி எப்போது உங்கள் கருத்தடங்கிய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்வேன்! என்று கதறியது. கொஞ்ச நேரம் அழுதுச் கொண்டே, தேம்பித் தேம்பி அழுதுக்கொண்டே இருந்தது. பிறகு வேறியோடு, மாற்ற முடியாத வேதனையோடு பேசத் தொடங்கியது. என்ன பேசியது அவ்வுருவம்! நயவஞ்சககுள்ளநரிக் கூட்டத்தின் செயலால் நாட்டிற்கு நலம் செய்யும் நீங்கள் மறைந்தீரே! மதிவாணமேதைகளை, அறிவின் தூதர்களை, ஆராய்ச்சிக் கருவூலங்களை அழித்துவிட்டதே ஆரியம்! ஆட்டையும், மாட்டையும், தின்ற அநாகரிகக் கும்பல் இன்று அறிஞரை வேட்டையாடி

விட்டதே! சூழ்ச்சியைத் தவிற வேறென்று மறியாத ஏ! சுயநல வர்க்கமே! நீ சுகப்படுவதற்கு சிந்தனைச் சீலர்களா இரத்தத்தை சிந்துவது! இதுசரியா? முறையா? சிந்தித்தாயா ஒருகணம் சித்ரவதை செய்தாயே! இதுதான் சிவன் உனக்கிட்ட ஆணையா? அண்ட இடம் கேட்ட ஆரியக் கழுகுகளே இன்றுதான் உங்கள் பாழும் வயிர் நிறைந்ததா? ஏ பண்பற்ற மாமிசப்பர்வதங்களே! பண்டிதர்களைப் பலிகொண்டு பாரறிய பவனிவருகின்றீர்களே! வெட்கமில்லையா உங்களுக்கு! நடு நிலையில்லா குடி கேடர்களே! நல்லதைச் சொல்லவும், செய்யவும் என்றும் நாட்டங்கொள்ளாத, பழக்கமில்லாத உங்கள் நாசவேலைகளுக்கு முன்பு அன்பே வடிவானவர்கள் கழுவிலே அவதிப்பட்டு உயிர் துறந்தார்களே! அவர்கள் உடலிலே பெருகிய இரத்தவெள்ளம் கல்லான உங்கள் நெஞ்சங்களை கறைக்கவில்லையா? அவர்களின் உடலங்கள் கழுவிலே துடித்துத் துள்ளியபோது உங்கள் கண்களில் மதமெனும் மண்ணு மண்டி மறைத்து விட்டது! மனித உணர்ச்சியில்லா மரக்கட்டைகளே உங்களுக்கும், காட்டு விலங்களுக்கும் என்ன வித்தியாசம். இரக்கமில்லா அரக்கர் குழாம் என்று சொன்னால் ஏன் பொருந்தாது தந்திரத்தையே தன் ஆயுதமாகக் கொண்டு அன்று இலங்கைக்கோமானை அழிக்க வஞ்சகவலை வீசி அதில் அகப்பட்ட சகோதர உணர்ச்சியற்ற சழக்கன், வம்சத்துரோகி விபீஷணனைக் கொண்டு திராவிடத் தலைவனை இராவணனை கொன்று கொக்கரித்து ராம ராஜ்யம் நடத்தினையே! அதைப்போல் இன்று ஒரு குலத்துரோகிக் குலச்சிறையைக் கொண்டு உன் வாழ்வை வளமாக்கிக் கொண்டாயோ இன்னும் எத்தனை குலச்சிறைகளைக் தேடிக்கொண்டிருக்கிறாயோ! இப்படிச் செய்து எத்தனை நாள் வாழ்ந்து விடுவாய்? வாழ்ந்திரு! நன்றாக வாழ்ந்திரு! என்று தள்ளாடி வந்த அந்த உருவம் நிமிர்ந்து நின்று வீராவேசமாக தன் உள்ளக் குமுறலை உரக்கச் சொல்லிற்று. பிறகு கால்கள்

தள்ளாட, தட்டுத்தடுமாறி அக்கழுமரத்தில் சிதைந்து மாட்டிக்கிடந்த அந்த பிணத்தினை தன் கைகளால் கட்டிக்கொண்டு வீழ்த்தனையா தமிழகமே! வீழ்ந்ததா இன்றோடு பகுத்தறிவுக் கலைகள்? அழிந்ததா தமிழரின் தனி வாழ்வு! தமிழரின் ஞான சூரியன் கடந்த மாலை நேரத்தோடு அஸ்தமனமாகிவிட்டதா? அது தன் முழு செங்கதிர்களைப் பரப்பி உதிக்கும் புனித நாள் எந்நாள்! என்று மங்கிய குரலில் கூறிவிட்டு பெருமூச்சு விட்டது. தன் இரத்தம் தோய்ந்த கைகளை பார்த்து இதுதான் அறிவியக்கம் வளர அறிஞர்கள் அளித்தக் காணிக் கையா? என ஒரு பயங்கரச்சிரிப்பையும் சிரித்தது. ஆத்தி ரத்தாலும், ஆவேசத்தாலும் அலைமோதிய அவ்வுரு வத்தின் இதயத்திலிருந்து வந்த அனல் போன்ற ஒரு மூச்சு, கடைசி மூச்சு சற்று நேரத்திற்கெல்லாம் நின்று விட்டது. அவ்வுருவமும் பொத்தென்று மண்ணில் சாய்ந்தது யார் அந்த வீர உருவம், அறிஞர்களுக்காக அங்கம் பதறும் அந்த உருவம்; யார்? பவணநந்தியை தப்புவிக்க முயன்ற கிழவர்தான்!

சற்று தூரத்தில் பலபேர் சேர்ந்து பாடும் குரலும், தாளத்தின் ஓசையும் கேட்டது. அந்தபாட்டின் சில முக்கிய சொற்கள்மட்டும் காற்றில் மிதந்துவந்து நன் ருக காதில் விழுந்தது. அப்பாட்டு வருமாறு :

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே!

என்று ஒருவர் பல்லகிலிருந்து பாட, அதைத் தொடர்ந்து பலபேர் வழிநடை நாமாவளியாகபாட, அந்த இரவிலே சாலை வழியாக அந்த வைதீகக் கூட்டத் தார் தங்கள் நாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந் தனர். என்ன ஆச்சர்யம்! அப்போதுதான் அவர்கள் வாயினாலேயே தாங்கள் செய்தது எல்லாம் தந்திர மயம் என்று ஒப்புக்கொண்டது போலிருந்தது.